# தாவீதைப் பற்றிய கடைசி வார்த்தை

## (2 சாமுவேல் 21–24; 1 இராஜாக்கள் 1; 2; 1 நாளாகமம் 20–29)

*நன்கு அறியப்பட்ட எழுத்தாளர் ஒருவர், தாவீதைப் பற்றி, "மனித குல வரலாற்றில் இவரைப் போன்று ஆவிக்குரிய செயல்தாக்கத்தை ஏற்படுத்திய பிற மனிதர்கள் ஆறு பேருக்குமேல் இருக்கமாட்டார்கள் என்று நாம் இவரைக் குறித்துத் தாராளமாய்க் கூறலாம்" என்று சொல்லியிருக்கின்றார்.[1] தாவீதுடையது போன்ற ஒரு வாழ்வை ஒருவர் எவ்வாறு மேற்கொள்ளக் கூடும்?*

*2 சாமுவேல் புத்தகத்தின் எழுத்தாளர் அழகான பரந்த காட்சி அணுகுமுறையைப் பயன்படுத்தினார். அப்சலோமின் கலகம் நசுக்கப் பட்டிருந்ததைத் தொடர்ந்து, 2 சாமுவேல் புத்தகத்தின் கடைசி நான்கு அதிகாரங்கள் தாவீதின் வாழ்விலிருந்து - நல்லதும் மோசமானதுமான நாட்களின் - காட்சிகளின் நறுமண இதழ்கள் கொண்ட கலவையை, அவை எப்போது நடைபெற்றன என்பது பற்றி சிறிதளவே குறிப்புகளுடன் பதிவுசெய்துள்ளன. 1 இராஜாக்கள் புத்தகமானது, பத்து ஆண்டுகள் சென்ற பின் தாவீது தமது மரணப்படுக்கையில் இருந்து கொண்டு, சாலொ மோனுக்கு ராஜ்யத்தைத் திருப்பத் தயாராக இருந்த வரலாற்றைச் சுருக்கமாகத் தொகுத்துரைக்கின்றது.*

*இதற்கு மறுபுறத்தில், 1 நாளாகமத்தின் எழுத்தாளர் வலியுறுத்தும் அணுகுமுறையொன்றைப் பயன்படுத்தினார். அவர், தாவீது தமது வாழ்வின் கடைசி பத்து ஆண்டுகளை சாலொமோனுக்கு எல்லாவற்றையும் ஆயத்தப் படுத்தி வைப்பதற்காக, அரசை ஒருங்கமைப்பதற்காக, (எல்லாவற்றிற்கும் மேலாக) தேவாலயத்தைக் கட்டுவதற்கான தயாரிப்புப் பணிகளைச் செய்வதற்காகப் பயன்படுத்தினார் என்று நம்மை அறியச் செய்கின்றார்.*

*இந்த இரு அணுகுமுறைகளைப் பற்றியும் நான் நினைத்துப் பார்க்கும் போது, எனக்கு இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகள், ஒரு மாபெரும் மனிதரின் மரண நிகழ்ச்சிகளைக் கையாளுவது போன்ற செயல் நினைவுக்கு வருகின்றது. அவற்றில் ஒரு அலைவரிசையானது, அந்த மனிதரின் வாழ்விலிருந்து காட்சிகளுடன், உயர்ந்த மற்றும் தாழ்ந்த கருத்துக்களையும், அவரது பெலங்கள் மற்றும் பெலவீனங்கள் ஆகியவற்றையும் விவரித்துரைக்கின்றது. இன்னொரு அலைவரிசையானது அந்த மனிதரின் வாழ்வில் அவரை*

*இயக்கும் சக்தியாக இருந்தவற்றைப் பற்றியும் அவரது உயர்ந்த சாதனைகளைப் பற்றியும் கவனம் செலுத்துகின்றது. 2 சாமுவேல் மற்றும் 1 இராஜாக்கள் ஆகிய புத்தகங்கள் முதல் அலைவரிசை போன்றவையாக உள்ளன; 1 நாளாகமம் புத்தகம் இரண்டாவது அலை வரிசை போன்றதாக உள்ளது.*

*எனது மனதில் இந்த சிறப்புத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் வேளையில், இன்னொரு சிந்தனையும் வந்தது: இவ்விரண்டில் எந்த ஒரு அலைவரிசையும் இம்மனிதரின் வாழ்வைச் சித்தரித்தல் என்பதில் மட்டும் திருப்தியடைவதாயிருக்காது. இவ்விரண்டு அலைவரிசைகளுமே என்னை அதிகம் எரிச்சல் மூட்டும் அம்சம் ஒன்றைக் கொண்டிருக்கும்: இம்மனிதரை மதிப்பீடு செய்வதற்கான - இவர் வெற்றியடைந்தாரா அல்லது தோல்வியடைந்தாரா, வரலாற்றில் இவரது இடம் எதுவாக இருக்கும் என்று கூறுவதற்கு - "நிபுணர்கள்" இருப்பார்கள். இந்த சிந்தனைக்கான என் முதல் பதில்செயல் புருவத்தைச் சுழிப்பதாகவே இருந்தது; என் இரண்டாவது பதில்செயல் மதியீனமாகப் பல்லிளித்தல் என்பதாக இருந்தது. இந்தப் பாடத்தின்போது, நான் அந்த "நிபுணர்களின்" பணியை மேற்கொண்டேன். அவ்வப்போது தாவீதின் செயல்கள் என் எலும்பு வரைக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்திற்று. நான், "தாவீதே, உம்மால் எப்படி முடிந்தது? நீர் கர்த்தரையும் அவரது வசனத்தையும் நேசித்தீர் என்று நான் அறிவேன்! உம்மால் இதை எப்படிச் செய்ய முடிந்தது?'' என்று கதறுவது போல் உணர்ந்தேன். ஒருவேளை நீங்களும் கூட இதையே செய்திருக்கலாம்.*

*தாவீதினுடைய வாழ்வின் நாடக பாணியிலான இயல்பைப் பற்றி நான் அதிகமாய்ச் சிந்திக்கச் சிந்திக்க, அவரது வாழ்வை சிறப்புத் தொலைக்காட்சி நிகழ்ச்சியின் அணுகுமுறையில் - "நிபுணர்கள்" முடிவை எடுத்துரைப்பதுடன் முடிவு செய்யும் வகையில் மூடிப்போர்த்துவது என்பது அதிகம் ஏற்புடையதாகக் காணப்பட்டது. நீங்கள் உங்கள் கற்பனையை சற்றே நீட்டியிழுக்க வேண்டியிருக்கலாம், ஆனால் என்னுடன் நிலைத்திருங்கள்.*

## தாவீதைப் பற்றி மனிதரின் கடைசி வார்த்தைகள்

*எண்ணற்ற விளம்பர நிகழ்ச்சிகளுக்குப் பின்பு, தொலைக்காட்சித் திரையில் பின்வரும் வார்த்தைகள் தோன்றுகின்றன: "இன்றைக்கான சத்தியம் வழங்கும் சிறப்பு நிகழ்ச்சி: தாவீதைப் பற்றிய கடைசி வார்த்தை." தலைப்பு மறைகின்றது, வர்ணனையாளரின் முகம் திரையில் தோன்றுகிறது. "இஸ்ரவேலின் ராஜாவும் நமது நாட்களின் மாபெரும் தலைவருமான தாவீது காலமாகி விட்டதால், நாடே துக்கத்தில் ஆழ்ந்துள்ளது. தாவீது ராஜாவின் வாழ்வில் நடந்த வெகு சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சிகளைக் காணுகையில் இந்த விசேஷித்த புகழுரையின்போது நீங்கள் எங்களுடன் சேர்ந்துகொள்ளும்படி உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். எங்களுடன் சிறப்பு விளக்கவுரையாளர்கள் எனப்படும்* Ima Critic & Ura Critic *ஆகியோர் இருக்கின்றார்கள்."*

***பேரரசின் உரிமையாளர் (2 சாமுவேல் 21:1-14)***

*இளைஞராயிருந்த தாவீதின் கவலை தோய்ந்த முகம் திரை முழுக்கத் தெரிகையில், வர்ணனையாளரின் குரல் தொடருகின்றது. "நிகழ்வுகள் பற்றிய நீண்ட நாள் நினைவு கொண்டவர்கள், ஏழரை ஆண்டு கால உள்நாட்டு மற்றும் இராணுவக் கலவரங்களுக்குப் பின்பு தாவீது இஸ்ரவேல் நாடு முழுவதிற்கும் ராஜாவாக அபிஷேகம் செய்விக்கப்பட்டதை நினைவு கூருவார்கள். அவர் தமது முப்பத்தியேழாம் வயதில் கடைசியாக அரியணை ஏறியபோது, நாடானது நொறுங்கிக் கிடந்தது. தாவீது வெளியிலிருந்து வரக்கூடிய விரோதிகளைக் கையாளவேண்டியிருந்தது மட்டுமின்றி, சவுலின் அழிவுபடுத்தும் ஆட்சியின் வீழ்ச்சிகளையும் கையாள வேண்டியிருந்தது."*

*புகைப்படக் கருவி பின்னோக்கி நகருகின்றது. தாவீது, உடன் படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருந்த கூடாரத்தின் முன்பாக இருப்ப தாகக் காண்பிக்கப்படுகின்றார்.[2] அவர் வானத்தை நோக்கியவாறு பேசுகின் றார்: "மூன்று ஆண்டுகள் கர்த்தரே! மூன்று நீண்ட ஆண்டுகள் மழை யில்லாமல் வாடுகின்றோம்! எங்கள் மிருகங்கள் எல்லாம் மடிகின்றன. எங்கள் பிள்ளைகள் சாப்பாட்டுக்காகக் கதறுகின்றார்கள். ஏன் கர்த்தரே, ஏன்?" மேலிருந்து ஒரு குரல் ஒலிக்கின்றது: "கிபியோனியரைக் கொன்று போட்ட சவுலுக்காகவும், இரத்தப்பிரியரான அவன் வீட்டாருக்காகவும் இது உண்டாயிருக்கிறது" (21:1).[3]*

*தாவீது எருசலேமுக்குத் திரும்புகையில், வர்ணனையாளர் விளக்கம் தருகின்றார்: "யோசுவா இந்த நாட்டுக்குள் வந்தவேளையில், கிபியோனி யர்கள் தங்களை அந்தத் தலைவர் அழிக்க மாட்டார் என்று ஒரு பரிசுத்த வாக்குறுதியை ஏற்படுத்தும்படி ஒரு தந்திரவேலை செய்தார்கள். யோசுவா தாம் ஏமாற்றப்பட்டதை அறிந்தபோது, அவர் கிபியோனியர்களை லேவியர்களுக்கு எந்நாளும் வேலைக்காரர்களாக்கி ஆசரிப்புக் கூடாரத்திற்கு விறகும் தண்ணீரும் கொண்டுவரும் வேலைக்கென்று அவர்களை நியமித்தார் (யோசு. 9). சவுல் ராஜாவானபோது, கிபியோனியர்கள் அதற்கு முந்திய முன்னூறு ஆண்டுகள் அளவாக நாட்டில் சமாதானமாக வாழ்ந்து, யோசுவாவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த பணிகளைச் செவ்வனே செய்து கொண்டிருந்தார்கள். ஆயினும் சவுல் அவர்களை அழித்தொழிக்க முடிவு செய்தார் - அதில் ஏறக்குறைய வெற்றியும் அடைந்தார்.[4] இதற்கான தாமதமான விளைவொன்று தாவீதின் நாட்களின்போது வந்தது: அதுவே நாட்டை சாபத்திற்குள்ளாக்கிய பஞ்சம் ஆகும்."*

*காட்சி மாறுகின்றது, தாவீது அரியணையில் வீற்றிருக்கக் காணப்படு கின்றார். அவருக்கு முன்பாகப் பல மனிதர்கள் இருக்கின்றார்கள். அரியணைக்கு அருகில் பொன் வெள்ளி நாணயங்கள் நிறைந்த பணப் பெட்டி ஒன்று திறக்கப்பட்ட நிலையில் உள்ளது. அந்த மனிதர்கள் கிபியோனியர்கள் என்று அறிவிக்கப்படுகின்றார்கள். தாவீது பேசுகின்றார்: "நான் உங்களுக்குச் செய்ய வேண்டியது என்ன? நீங்கள் கர்த்தருடைய சுதந்தரத்தை ஆசீர்வதிக்கும்படிக்கு, நான் செய்ய வேண்டிய பிராயச்சித்தம் என்ன?" (21:3).*

*அந்த மனிதர்கள் தலைவணங்கி பதில் அளிக்கின்றார்கள்: "சவுலோடும் அவன் வீட்டாரோடும் எங்களுக்கு இருக்கிற காரியத்திற்காக எங்களுக்கு வெள்ளியும் பொன்னும் தேவையில்லை; இஸ்ரவேலில் ஒருவனைக் கொன்று போட வேண்டும் என்பதும் எங்கள் விருப்பம் அல்ல." "கொன்று போடுதல்?" நம்மீது ஒரு அதிர்வலை ஓடுகின்றது. அவர்கள் இரத்தத்திற்கு இரத்தத்தை விரும்பினார்கள். தாவீது அரண்மனைக்கு வெளியிலிருந்த [காய்ந்து போன] மேய்ச்சல் நிலத்தையும், விரிவுகண்டிருந்த பூமியையும் ஜன்னல் வழியே உற்று நோக்கி, பின்பு இறுதியாக அவர்களிடம், "நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிறீர்கள்?" என்றார் (21:4).*

*அந்த மனிதர்கள் தங்கள் பதிலுடன் தயாராயிருந்தார்கள்: "அவன் [சவுல்] குமாரரில் ஏழு பேர் ... கர்த்தருக்கென்று தூக்கிப்போட, எங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும்." நிம்மதியும் கவலையும் தாவீதின் முகத்தில் பிரதிபலிக்கின்றன. நாம் அவரது சிந்தையை ஏறக்குறைய வாசிக்க முடிகின்றது: "நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்ட பின்பு, வெறும் ஏழுபேர் மட்டுந்தானே ... ஆனால் நான் எப்படி ஏழு பேரை கொலைத் தண்டனைக்குத் தீர்ப்பிட முடியும்?" கடைசியில் ராஜா தலையசைத்து, "நான் அவர்களை ஒப்புக்கொடுப்பேன்" என்று சொன்னார் (21:6).*

*அந்த மனிதர்கள் புறப்பட்டுச் செல்லுகின்றார்கள். தாவீது தமது ஆலோசகர்களை அழைக்கிறார்,[5] ஏழு பேரைத் தேர்வு செய்யும் இடர்ப்பாடு மிகுந்த பணி தொடங்குகின்றது. அவர்கள் சவுலின் சந்ததியில் இன்னும் உயிரோடிருக்கின்ற ஆண்களைப் பட்டியலிடத் தொடங்குகின்றார்கள். மேவிபோசேத்தின் பெயர் குறிப்பிடப்பட்டபோது, தாவீது தமது தலையை எதிர்மறையாக அசைக்கின்றார். அவர், "மேவிபோசேத்தை அந்தப் பட்டியலில் இருந்து நீக்கி விடுங்கள். நான் நீண்ட நாட்களுக்கு முன்பு அவனது தந்தையிடம் ஒரு வாக்குறுதி கொடுத்துள்ளேன்."[6] அநேக சாத்தியங்கள் இல்லாமற் போகின்றது; சவுலின் வம்ச வழி ஏறக்குறையத் துடைத்து ஒழிக்கப்பட்டுள்ளது.[7] இன்னும் உயிருடன் இருந்தவர்களில் சவுலின் மறுமனையாட்டியான ரிஸ்பாளின்[8] இரண்டு மகன்களும், சவுலின் மூத்த மகளான மேராப்[9] என்பவள் பெற்ற ஐந்து மகன்களும் உள்ளடங்கி யிருக்கின்றார்கள்.*

*காட்சி மாறுகிறது, உயர்ந்த குன்று ஒன்றில், மஞ்சள் நிற ஆகாயப் பின்னணியில் ஏழு தூக்குமரங்களில் ஏழு உடல்கள் தொங்குகின்றன. இரட்டுடை அணிந்த பெண்ணொருத்தி அதைக் கவனித்துக் கொண்டிருக் கின்றாள், அவளது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடுகிறது. நாம் இதைக் கவனிக்கையில், காட்சியில் ஏற்படும் இலேசான மாற்றம் காலம் கடந்து செல்வதைச் சுட்டிக்காண்பிக்கின்றது. இரவும் பகலும் அந்தப் பெண், அந்த உடல்களின் அருகே இருந்துகொண்டு, அவற்றைக் கொத்தவரும் பறவைகளையும் தின்னவரும் மிருகங்களையும் அச்சுறுத்தி விரட்டிக் கொண்டிருக்கின்றாள்.[10]*

*இப்பொழுது காட்சி அரியணை அறைக்கு மாறுகின்றது. தாவீதிடம் ஒரு செய்தியாளர் வருகின்றார். "ரிஸ்பாள் இன்னும் அங்கேதான்*

*இருக்கின்றாள், அந்த உடல்களை அவள் காவல் காத்துக் கொண்டிருக்கின்றாள்" என்று கூறுகின்றான். தாவீது, அந்த உடல்களை எடுத்து, சவுல் மற்றும் யோனத்தான் ஆகியோரின் உடல்களின் எஞ்சிய பாகங்கள்*[11] *புதைக்கப்பட்ட இடமான சவுலின் தந்தையான கீஸ் என்பவரின் கல்லறையில் புதைக்கும்படி கட்டளையிடுகின்றார்.*

*காட்சியானது ஒரு மிகப்பெரும் கல்லறைக்கு வெளியே மாறுகின்றது. ஒரு மக்கள் கூட்டம் அழுது கொண்டிருக்கின்றது. தாவீது தனியே நின்று கொண்டிருக்கின்றார். அவர் அமைதியாக, தமது தலையை தாழ்த்தியவராக, ஆழ்ந்த சிந்தனையில் இருக்கின்றார். ஆகாயம் கருக்கின்றது, மேகங்கள் ஒன்றுகூடுகின்றன, மழைபெய்யத்தொடங்குகின்றது. மக்களில் பலர் கலைந்து சிதறிச் செல்லுகின்றார்கள். புகைப்படக் கருவி, வானத்தை நோக்கிப் பார்க்கும் தாவீதின் முகத்தை நெருக்கமாய்க் காண்பிக்க அசைகின்றது.*

*தாவீதின் முகம் திரையிலிருந்து மறைகின்றது, இரண்டு விமர்சகர்கள் ஒரு கணக்கிடும் பலகைக்கு முன்னால் அமர்ந்திருக்கின்றார்கள். திரையின் கீழ் உள்ள வார்த்தைகள், அவர்களில் ஒருவரை - உயரமான, ஒல்லியான, வழுக்கைத் தலைகொண்ட, தம்முகத்தில் எப்போதும் ஒரு கடுகடுப்பான தோற்றம் கொண்டவரை -* Ima Critic *என்று காண்பிக்கின்றது. இன்னொருவரை - ஒரு குட்டையான, உருண்ட வடிவமும் சந்தோஷப் பார்வையும் கொண்டவரை -* Ura Critic *என்றும் காண்பிக்கின்றது.*

Ima *அவர்கள், "என்னைப் பொறுத்தமட்டில் தாவீதைப் பற்றிச் சிந்திக்கையில் அவ்வகையான விஷயம் வயிற்றைக் குமட்டச் செய்கின்றது! மக்கள் அவரைப் பற்றிப் பெரிதாக நினைக்கின்றார்கள், இங்கேயோ அவர் ஒன்றும் அறியாத மக்களுக்கு மரண தண்டனை விதிக்கச் சம்மதிக்கின்றார்! இது ஒரு மிகப்பெரிய வீழ்ச்சியாகும்!" என்று உருமுகின்றார்.*

*புருவங்களைச் சுழித்த* Ura, *"நான் கூட தாவீதின் தீர்மானத்தைப் பற்றி கவலைப்படுகின்றேன், ஆனால் நாம் அவசரப்பட்டு விடாதிருக்க வேண்டும். அவர் செய்த விஷயம் கர்த்தரைப் பிரியப்படுத்தியது என்பது உறுதி, எனவே இங்கு நாம் அறியாத காரணிகள் இருக்கலாம். ஒருவேளை இது, கர்த்தரால் சவுலின் வீட்டார் வெறுக்கப்பட்டதின் பகுதியாக இருக்கலாம். ஒருவேளை மரித்துப் போன மனிதர்கள் ஒன்றும் அறியாதவர்களாய் இல்லாதிருக்கலாம். 'சவுலுக்காகவும் இரத்தப்பிரியரான அவன் வீட்டாருக்காகவும்' " என்று கர்த்தர் கூறியதை நினைவில் வையுங்கள் (21:1).*[12]

Ima *வெறுப்புக்காட்டும் சிற்றொலி செய்து, "இது வெறும் யூகம்!" என்கின்றார்.*

Ura *தமது முகவாயைத் தடவிக்கொண்டு, "இருக்கலாம், ஆனால் சந்தேகத்தின் பலனைத் தாவீதுக்கு கொடுக்கவே நான் விரும்புகின்றேன். இது ஒரு உயர்வாகவே உள்ளது."*

*ஒரு வீழ்ச்சியும் ஒரு உயர்ச்சியும் கணக்கீட்டுப் பலகையில் பதிவு செய்யப்படுகின்றன.*

*போர்வீரர் (2 சாமுவேல் 21:15-22; 1 நாளாகமம் 20:4-8)*[13]

*வர்ணனையாளர் திரையில் தோன்றுகின்றார். "தாவீது ஒரு இராணுவ நிபுணராயிருந்தார். அவர் போர் நடக்கும் இடத்திலிருந்து நூறு மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள இடத்தில், கை வைத்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு, முடிவுகளை எடுத்துக் கொண்டிருக்கவில்லை. அவர் தமது துருப்புக்களுடன் போர் நடக்கும் இடத்திலேயே இருந்தார்! இதோ இங்கு இஸ்ரவேலின் நிலையான விரோதிகளான பெலிஸ்தருடன் தாவீது நடத்திய நினைவுகூரத்தக்க யுத்தங்களில் ஒன்றின் காட்சி வருகின்றது ... இது காத் என்ற நகரில் படம் பிடிக்கப்பட்டதாகும்." திரையில் பின்வரும் வார்த்தைகள் சற்று நேரத்திற்குத் தோன்றுகின்றன: "பின்வரும் காட்சிகள் வன்முறை மற்றும் மரணம் ஆகியவற்றை நேரடியாகப் படம் பிடித்த நிகழ்வாகும். பார்வையாளர்களின் பகுத்தறியும் குணம் பரிந்துரைக்கப்படுகின்றது."*

*நாம் யுத்தத்தின் மையப்பகுதிக்குள் எறியப்படுகின்றோம். முதலில் நாம் வியர்வை வழிந்தோடும் உடல்கள், வெட்டிச் சாய்க்கும் ஆயுதங்கள், இரத்தக் குளத்தில் வீழ்ந்த உடல்கள் - இவற்றுடன் ஒன்று கலந்த கூக்குரல்கள், பெருமூச்சுகள் மற்றும் அலறல்கள் ஆகியவற்றினால் ஒரு குழப்பமான மனப்பதிவைக் கொண்டிருக்கின்றோம். படிப்படியாக நாம் யுத்தம் செய்பவர்களைக் காண்கின்றோம்: தாவீதும் அவரது மனிதர்களும் பெலிஸ்தரோடு யுத்தம் செய்து கொண்டிருக்கின்றார்கள். பெலிஸ்தர்கள் மத்தியில் இராட்சதர்கள் இருக்கின்றார்கள்; அவர்கள் தங்கள் பெரிய உருவகத்தைக் கொண்டு சின்னஞ்சிறிய இஸ்ரவேலர்களை அச்சுறுத்துகின்றார்கள். தாவீதும் அவரது மனிதர்களும் காட்டு மனிதரைப் போல் யுத்தம் செய்கின்றார்கள்.*

*யுத்தம் வளர்ந்து கொண்டிருக்கையில், தாவீது மெதுவாக மிக மெதுவாகச் செயல்படுபவராகின்றார். அவர் தம் கண்கள் செருகுகின்றன, அவர் தமது பட்டயத்தைத் தூக்குவது கடினமாகின்றது. தாவீது இருந்த திசையில் உற்று நோக்கிய ஒரு இராட்சதன், அவரது நிலையைக் கண்டு, அவரிடத்தில் நெருங்கி, தனது இராட்சதத்தனமான பட்டயத்தை அவரை நோக்கி வீசுகின்றான். கடைசித் தருணத்தில் தாவீதின் போர் வீரர்களில் ஒருவர், ராஜாவுக்கும் அந்த இராட்சதனுக்கும் இடையில் வந்து விழுந்து, தமது பட்டயத்தை விரோதியின் வயிற்றில் குத்துகின்றார். அந்த இராட்சதன் தடுமாறித் தரையில் விழுகையில் நாம் பெருமூச்சு விடுகின்றோம்.*[14]

*புகைப்படக் கருவியானது, படமெடுக்கும் இடத்திற்கும் விமர்சகர்களிடத்திற்கும் திரும்புகின்றது. Ura, Imaவை உறுத்து நோக்குகின்றார், "அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?"*

*"எனது ருசிக்கு இது மிகவும் வன்முறையாக உள்ளது, ஆனால் நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வர இது போன்ற விஷயங்கள் தேவை என்று நான் நினைக்கின்றேன். அது ஒரு உயர்ச்சியாக இருக்கும் என்றே நான் யூகிக்கின்றேன்."*

*கணக்கிடும் பலகையில் இரண்டு உயர்ச்சிகள் சேர்க்கப்படுகின்றன.*

*பாடகர் (2 சாமுவேல் 22:1-51)*[15]

*இப்போது காட்சியானது அரியணை அறைக்கு மாறுகின்றது. தாவீது அரச உடைகளை அணிந்து, ஒரு சுரமண்டலத்தைப் பிடித்தபடி அரியணையில் அமர்ந்திருக்கின்றார். வர்ணனையாளர் பேசுகின்றார்: "நம்மில் பலர் தாவீதின் வாழ்வில் வேறு எதைக்காட்டிலும் அவரது சங்கீதங்களினால் அதிகம் ஈர்க்கப்பட்டுள்ளோம். நம்மைப் போலவே தாவீதும், மகிழ்ச்சிப் பெருக்கின் கணங்களையும் ஆழ்ந்த கவலையின் கணங்களையும் கொண்டிருந்தார். ஆனால் நம்மில் பலரைப் போலின்றி, தாவீது அந்த உணர்வுகளைத் தோல்சுருள்களில் இட்டு வைத்து, அவை எல்லாவற்றையும் தமது கர்த்தரிடத்தில் எடுத்துரைத்தார். தாவீது வெற்றி பெற்று வந்தவுடனே, கர்த்தரைத் துதிப்பதை நாம் கவனித்துக் கேட்போம்."*

*அவரது கண்கள் மூடுகின்றன, தாவீது தெளிவான குரலில் பாடத் தொடங்குகின்றார்.*

> *கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் ரட்சகருமானவர்,*
> *தேவன், நான் நம்பியிருக்கிற என் துருக்கமும், என் கேடகமும்,*
> *என் ரட்சண்ணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமும், என்*
> *புகலிடமும் என் ரட்சகருமானவர்; என்னை*
> *வல்லடிக்கு நீங்கலாக்கி ரட்சிக்கிறவர் அவரே.*
> *ஸ்துதிக்குப்பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்;*
> *அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாகி ரட்சிக்கப்படுவேன்*
> *(22:2-4).*

*புகைப்படக் கருவி தாவீதை நோக்கி நெருங்கி வருகின்றது. ஒரு கணம் அவரது முகம் கடினமடைகிறது.*

> *என் சத்துருக்களைப் பின்தொடர்ந்து, அவர்களை அழிப்பேன்;*
> *அவர்களை நிர்மூலமாக்கும்வரைக்கும் திரும்பேன்.*

> *... என் ஜனத்தின் சண்டைகளுக்கு நீர் என்னை விலக்கிவிட்டு,*
> *ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக வைக்கிறீர்;*
> *நான் அறியாத ஜனங்கள் என்னைச் சேவிக்கிறார்கள் (22:38, 44).*

*பாடல் முடிகின்ற வேளையில் அவரது முகம் மீண்டும் மென்மையாகின்றது:*

> *இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள் உம்மைத் துதித்து,*
> *உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன்.*
> *தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான ரட்சிப்பை அளித்து,*
> *தாம் அபிஷேகம் பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும்,*
> *சதாகாலமும் கிருபை செய்கிறார் (22:50, 51).*

*திரை, வர்ணனையாளர்களுக்கு மாறுகையில் முதலில்* Ura *பேசுகின்றார்: "அந்தக் காட்சியானது அவரது இராணுவ வெற்றிக்குப் பின்பு, ஆனால் அவர் பத்சேபாளுடன் பாவம் செய்வதற்கு முன்பு நடந்ததென்று*

*நான் கூறுவேன் (தாவீது 2 சாமு. 21; 22 அத்தியாயங்களில் தமது தேவபக்தியான வாழ்வை வலியுறுத்தினார்). இது அவருடன் கர்த்தர் தமது உடன்படிக்கையை ஏற்படுத்திய பின்பு (2 சாமு. 7) எழுதப்பட்டதாகவும் இருக்கலாம். அது எப்போது எழுதப்பட்டிருப்பினும், என் இருதயத்தைத் தொட்டதாக உள்ளது!"*

Ima *"அவர் தமது விரோதிகளின் வீழ்ச்சியினால் அவகேடான இன்பம் கொண்டது என்னை ஒன்றும் செய்யவில்லை!"*

*"ஆனால், அப்பொழுதும் அது ஒரு மாபெரும் சங்கீதமாயிருந்ததே!"*

*''சரிதான் … அது ஒரு மிக நல்ல சங்கீதமாகவே இருந்தது … தயக்கத்துடனான உயர்ச்சி."*

Ura *முகத்தில் புன்முறுவலுடன், கணக்கிடும் பலகையில் இரண்டு உயர்ச்சிகள் சேர்க்கப்படுகின்றன.*

***ஆழ்ந்த அறிவுடைய ஞானி (2 சாமுவேல் 23:8-39)***[16]

*பற்கள் பலவற்றைக் கொண்ட மனிதர் ஒருவர் தமஸ்குவின் காலணிகளை விற்பவராகத் திரையில் தோன்றுகின்றார். நாம் [குளிர்] பானம் அருந்தி விட்டுத் திரும்பும்போது, வர்ணனையாளர் "இப்போது நாம் தாவீதின் ஆளுகையின் கடைசிப் பத்து ஆண்டுகளை முன்னோக்கி நகருகின்றோம்" என்று கூறிக் கொண்டிருக்கின்றார். காட்சியானது மீண்டும் அரியணை அறைக்கு மாறுகின்றது. தாவீதின் புகழ்பெற்ற செம்முடியில் நரைமுடிகள் தெளிக்கப்பட்டது போல் காட்சியளிக்கின்றன. அரச உடையானது அவரது இடுப்பைச் சுற்றி மிகவும் இறுக்கமானது போல் உள்ளது. வர்ணனையாளர் தொடருகின்றார்: "விசேஷித்த தனிநபர்களுக் குத் தமது பாராட்டுதலை வெளிப்படுத்தியதென்பது தாவீது தமது கடைசி நாட்களில் செய்த காரியங்களில் ஒன்றாக இருந்தது. அவ்வாறு கனப்படுத்தப் பட்டவர்களில், தாவீது சவுலினால் தேடப்பட்டவராகத் திரிந்தபோது அவருடன் சேர்ந்து கொண்டவர்களும் இருந்தார்கள்."*

*[தொலைக்காட்சி] நிலையம் தாவீதின் அரியணை அறையின் படத்தைக் காண்பிக்கின்றது. ராஜ செயலாளரை தாவீது அழைக்கின்றார், அவர் ஒரு தோற்சுருளையும் எழுதுகோலையும், மையையும் கொண்டு வருகின்றார். தாவீது, பின்வரும் மூன்று பராக்கிரமசாலிகளின் பெயர் களுடன் கனப்படுத்தப்பட வேண்டியவர்களின் பட்டியலைத் தொடங்கும் படி ஆணையிடுகின்றார்: தோதோவின் மகன் எலெயாசார், ஆகேயின் மகன் சம்மா ஆகியவர்கள் ஒய்வில்லாதிருந்த காரணத்தினால் மாபெரும் வெற்றிகளைக் குவித்தார்கள், மற்றும் ஒரே வேளையில் எண்ணூறு பேர்களைக் (இது 1 நாளா. 11:11ல் முந்நூறு பேர்கள் என்றுள்ளது) கொன்ற யோசேப்பாசெபெத்.*

*சற்றே தாமதித்த தாவீது, பின்பு எழுதுபவரிடத்தில், " 'கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பித்தார்' என்று நிச்சயமாய் எழுதுங்கள்" என்று கூறினார் (23:12).*

*தாவீது தமக்கு பெத்லேகேமின் தண்ணீரைக் கொண்டுவந்த மூன்று பராக்கிரமசாலிகளைப் பற்றிக் கூறுகின்றார். அவர்களின் தைரியத்தையும்*

பற்றுறுதியையும் தாவீது நினைவுகூருகையில், அவரது கண்கள் பனிக்கின்றன.

தாவீது அடுத்த முப்பது மனிதர்களின் பட்டியலைத் தொடங்கு கின்றார். முதலாவது, முப்பது பேருக்குள்ளும் தலைவராயிருந்து வழி நடத்திய யோவாபின் சகோதரரான அபிசாய் இருக்கின்றார். அடுத்து, தாவீதின் மெய்க்காப்பாளர்களுக்குத் தளபதியான பெனாயா இருக் கின்றார். எஞ்சியவர்களை தாவீது பட்டியலிடுகையில், ஒவ்வொரு பெயரும் கூறப்படுகையில் தாவீது சற்றே நிதானித்துக் கடந்த காலத்தை நினைவு கூருகின்றார்: "யோவாபின் தம்பி ஆசகேல் (இவர் அப்னேரால் கொல்லப் பட்டார்; 2 சாமு. 2) … எல்க்கானான் … சம்மா … எலிக்கா …" சற்றுப் பின்பு தாவீது இந்தப் பட்டியலின் முடிவுப் பகுதிக்கு வருகின்றார். தாவீது கடைசிப் பெயரைக் கூறுகின்றார்: "ஏத்தியனாகிய உரியா."[17] புகைப்படக் கருவி, வேதனை நிறைந்த தாவீதின் முகத்தைச் சற்றே நிதானமாகக் காண்பிக்கின்றது. காட்சி மறைகின்றது.

[தொலைக்காட்சி] நிலையத்தில், முறுமுறுக்கின்றார். "வன்முறையின் மிகவும் தரங்குலைந்த பாராட்டுரை!"

Ura, "ஆனால் அது அவசியமாயிருந்தது. தாவீது தமது மனிதர்களுக்குப் பாராட்டுதலைக் காண்பித்தார் என்பதே முக்கியமான விஷயமாக உள்ளது! இது ஞானத்தையும் பண்பையும் காண்பிக்கின்றது."

தயக்கத்துடன் Ima ஒப்புக் கொள்ளுகின்றார். "அப்படியிருக்கும் என்று நான் நினைக்கின்றேன்."

"எனவே இது இன்னும் இரண்டு உயர்ச்சியா?"

Imaவின் தலையசைப்பு அரிதாகவே அறிந்துகொள்ளக் கூடியதா யிருந்தது.

பலகையில் இரண்டு உயர்ச்சிகள் சேர்க்கப்படுகின்றன.

*பாவி (2 சாமு. 24:1-25; 1 நாளா. 21:1-22:1; 27:23, 24)*[18]

திரையில் மீண்டும் வர்ணனையாளர் தோன்றுகின்றார்: "தாவீதின் கடைசி நாட்கள் வெற்றி, துன்பம் ஆகியவற்றின் கலவையாயிருந்தன. அரசரின் புகழ்வற்ற ஜனத்தொகைக் கணக்கிடுதல் மூலம், ஒருவரும் மறக்க முடியாத காலம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது."

மீண்டும் நாம் அரியணை அறையைக் கண்ணோக்குகின்றோம். ராஜாவுக்கு முன்பாக, கடுங்கோபம் கொண்ட ஒரு முதிய மனிதர் நிற்கின்றார் [யோவாபுக்கு மக்களைக் கணக்கிடும்படி கட்டளை பிறப்பிக் கப்பட்டது], இராணுவ உடையணிந்த மற்றவர்களும் அங்கிருக்கின்றார்கள். தாவீதின் முடி ஏறக்குறைய வெண்மையாக உள்ளது. ஆயினும் அவர் பேசும்போது அவர் குரல் இன்னும் பலமானதாகவும் அதிர்கிறதாகவும் உள்ளது: "ஜனங்களின் [யுத்தம் செய்யத்தக்க வயதுடையவர்களின்; 2 சாமு. 24:9ஐக் காணவும்] இலக்கத்தை நான் அறியும்படிக்கு, நீ [ங்கள்] தாண் முதல் பெயெர்செபா மட்டுமுள்ள இஸ்ரவேலின் கோத்திரமெங்கும் சுற்றித் திரிந்து ஜனங்களைத் தொகையிடுங்கள்" (2 சாமு. 24:2).

காட்சி மாறுகின்றது. தாவீது தமது படுக்கையின் அருகில் அமர்ந்து

*கொண்டு, புத்தகச் சுருளில் இருந்து வாசித்துக் கொண்டிருக்கின்றார். "ம்ம்ம் ... பட்டயம் பிடிக்கத் தக்கதாக இஸ்ரவேலில் எட்டு இலட்சம் பேர்களும், யூதேயாவில் ஐந்து இலட்சம் பேர்களும் இருக்கின்றார்கள்''[19] என்று தனக்குள் கூறிக் கொள்ளுகின்றார். அவர் விளக்கை அணைத்து விட்டு, அந்த இரவு வேளையில் தமது படுக்கையில் புரளுகின்றார். அவர் உருண்டு திரும்புகின்றார். கடைசியாக அவர், "நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேனே; ... நான் மகா புத்தியீனமாகச் செய்தேன்" (24:10) என்று முணுமுணுக்கிறார்.[20]*

*இது அடுத்த நாளின் காலை வேளையாக உள்ளது. தாவீது தமது படுக்கை முனையில் அமர்ந்து இருக்கும்போது, ஒரு மனிதர் உள்ளே வருகின்றார். அந்த மனிதரைப் பார்ப்பதில் தாவீது வியப்படையவில்லை. அந்த மனிதர் பேசுகின்றார்:*

> *"மூன்று வருஷத்துப் பஞ்சமோ?[21] அல்லது உன் பகைஞரின் பட்டயம் உன்னைப் பின்தொடர நீ உன் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப் போகச் செய்யும் மூன்றுமாதச் சங்காரமோ? அல்லது மூன்றுநாள் கர்த்தருடைய தூதன் இஸ்ரவேலுடைய எல்லையெங்கும் சங்காரம் உண்டாகும்படி தேசத்தில் நிற்கும் கர்த்தருடைய பட்டயமாகிய கொள்ளை நோயோ? இவைகளில் ஒன்றைத் தெரிந்து கொள்" என்று கர்த்தர் உரைத்திருக்கிறார் (1 நாளா. 21:12).*

*தாவீது இடர்ப்பாடுற்றவராய் அறையில் நடையிடுகின்றார். கடைசியில் அவர் பேசுகின்றார்: "இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக" (21:13).*

*திரையில் பின்வரும் வார்த்தைகள் சற்று நேரம் பளிச்சிடுகின்றன: ''பின்வரும் காட்சிகள் பற்றி பெற்றோர்த்துவ உசிதத்தன்மைகள் அறிவுறுத்தப்படுகின்றன." நாம் ஒரு சிறு கிராமத்தின் பிரதான தெருவின் காட்சிக்கு அழைத்துச் செல்லப்படுகின்றோம். மனிதர்கள் தெருவில் அவசரமாக நடக்கின்றார்கள். கடை வைத்திருப்பவர்கள் கடந்து செல்பவர் களை அழைக்கின்றார்கள். பெண்கள் பொருட்களை கண்ணோக்கி ஒருவர் பிறரைச் சந்திக்கின்றார்கள். பிள்ளைகள் தங்கள் தாய்மார்களின் பாதத்தில் விளையாடுகின்றார்கள்.*

*திடீரென்று, கொதிக்கின்ற கரும்பச்சை மேகமொன்று ஆகாயத்தில் தோன்றுகின்றது. மக்கள் அதை பார்க்கையில், அவர்கள் முகங்களில் பயம் எழுதப்படுகின்றது. அந்த மேகம் அந்த கிராமத்தை நிழலிடுகையில், மனிதர்கள் தள்ளாடி விழுகின்றார்கள்: ஒரு கடைக்காரர், குடும்பத்துடன் நடந்து செல்லும் ஒரு மனிதர், தெருவில் அவசரமாக நடந்து செல்லும் ஒரு மனிதர், விழுந்து கிடந்தவர்களின் அருகில் அவசரமாக விரைந்து வந்த பெண்கள், அவர்களிடம் மண்டியிட்டு, அவர்களின் தலைகளைத் தாங்கிப் பிடிக்கின்றார்கள். புகைப்படக் கருவியானது விழுந்து கிடக்கின்ற ஒரு மனிதரை நோக்கித் திரும்புகிறது. அவரது முகத்தில் பயத்துடன் கூடிய பார்வை பதியப்பட்டுள்ளது. தெருவெங்கும் அலறலும் புலம்பலும்*

*எதிரொலிக்கின்றது.*

*நாம் இன்னொரு கிராமத்திற்குத் திருப்பப்பட்டு, இதே காட்சி அங்கும் நடப்பதைக் காண்கின்றோம். ... பின்பு வேறொரு கிராமம் ... மற்றும் ஒன்று. நாம் திகிலடைந்து கண்களை மூடிக் கொள்ளுகின்றோம். நமது கண்கள் நனைந்திருப்பதைக் கண்டு நாம் வியப்படைகின்றோம். வர்ணனையாளர், "கொள்ளை நோய் வடக்கு பாலஸ்தீனத்தில் தொடங்கி தெற்கை நோக்கி வேகமாய் நகர்ந்தது" என்று கூறுவதைக் கேட்கின்றோம். நாம் மீண்டும் திரையில் கண்ணோக்குகின்றோம். கொள்ளைநோய் நகர்ந்து செல்லுவது வரைபடம் ஒன்றில் காண்பிக்கப்படுகின்றது. வர்ணனையாளர் தொடருகின்றார்: "மரணம் தலைநகரைச் சென்றடைய அதிக நேரம் ஆகாது" ஒரு அம்புக்குறி எருசலேமைச் சுட்டிக்காண்பிக்கின்றது. நாம் தலைநகர் இருக்குமிடத்திற்குத் திருப்பப்படுகின்றோம்.*

*தாவீதும் முதிர் வயதான பல மனிதர்களும், இரட்டுடுத்தியவர்களாய், தங்கள் தலைகளில் சாம்பலை போட்டுக் கொண்டு, உடன்படிக்கைப் பெட்டி இருந்த கூடாரத்திற்கு முன்பாக மண்டியிடுகின்றார்கள். ராஜாவிடம் விரைந்து வந்த ஒரு செய்தியாளர், "இது ஏறக்குறைய இங்கு வந்துள்ளது!" என்று கூறுகின்றார். தாவீது வடக்கு நோக்கிப் பார்க்கின்றார். அவரது கண்கள் அகலத் திறக்கின்றன. அழகற்ற அந்தப் பச்சை நிறமேகம் வடக்கு ஆகாயத்தை நிரப்பியிருக்கின்றது. சுற்றிச் சுழலும் மூடுபனிக்குள் ஒரு வடிவம் உருப்பெறுகிறது: "பூமிக்கும் வானத்திற்கும் நடுவே நிற்கிற கர்த்தருடைய தூதன் உருவின பட்டயத்தைத் தன் கையில் பிடித்து, அதை எருசலேமின்மேல் நீட்டியிருக்கக் கண்டான்" (1 நாளா. 21:16)! தாவீது முகங்குப்புற விழுந்து கதறுகின்றார், "ஜனத்தை எண்ணச் சொன்னவன் நான் அல்லவோ? நான்தான் பாவஞ்செய்தேன்; ... என் தேவனாகிய கர்த்தாவே, வாதிக்கும்படி உம்முடைய கரம் உம்முடைய ஜனத்திற்கு விரோதமாயிராமல், எனக்கும் என் தகப்பன் வீட்டிற்கும் விரோதமாயிருப்பதாக" (1 நாளா. 21:17).*

*தேவனுடைய தூதனாக முன்பு வந்திருந்தவர் தோன்றுகின்றார். அவர், "நீர் போய், எபூசியனாகிய அர்வனாவின்[22] களத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கும்" (2 சாமு. 24:18) என்று கூறினார்.[23] திரையில் எருசலேமின் வரைபடம் ஒன்று தோன்றுகிறது, அதில் அந்த இடத்தை ஒரு அம்புக்குறி சுட்டிக் காண்பிக்கிறது. வர்ணனையாளர் விளக்கம் தருகின்றார்: "அந்தக்களம் நகரத்தின் மதில்களுக்கு வடக்கில் இருந்தது. எருசலேமின் முடிவு அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. பத்தாயிரக்கணக்கான மக்கள் ஒரு சில நிமிடங்களில் துடைத்தொழிக்கப்படக் கூடும். ராஜா விரைவாய் அவ்விடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்."*

*சமதள உச்சியைக்கொண்ட ஒரு சிறு குன்றின்மீது ஒரு முதியவர் நிற்பதைக் காண்பிக்கும் வகையில் காட்சி மாறுகிறது, அவர் தூசி, பதர் ஆகியவை தம் உடலை மூடியிருக்கும் நிலையில், நான்கு இளைஞர்களின் உதவியுடன் கோதுமையைப் போரடித்துக் கொண்டிருக்கிறார் (1 நாளா. 21:20). அச்சுறுத்தும் அந்த மேகத்தைக் காண்கின்ற அவர், தமது காளைகளை மகா முயற்சியுடன் விரட்டுகின்றார்.*

தாவீதும் இரட்டுடுத்திய அவரது குழுவினரும் காட்சியில் தோன்றுகின்றார்கள். போரடித்துக் கொண்டிருந்த மனிதர் ராஜாவைச் சந்திக்க விரைந்து வந்து, அவருக்கு முன்பாக வீழ்ந்து, "ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானிடத்தில் வருகிற காரியம் என்ன?" என்று கேட்கின்றார் (2 சாமு. 24:21அ). தாவீது, "வாதை ஜனத்தை விட்டு நிறுத்தப்படக் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படிக்கு இந்தக் களத்தை உன் கையிலே கொள்ளவந்தேன்"; "வாதை ஜனத்தைவிட்டு நிறுத்தப்பட எனக்கு அதைப் பெறும் விலைக்குக் கொடு" என்று பதில் அளித்தார் (2 சாமு. 24:21ஆ; 1 நாளா. 21:22).

அந்த மனிதர் தலையை உயர்த்தி, தங்களுக்கு மேலாக பட்டயத்துடன் ஒரு தூதன் உலாவிக் கொண்டிருக்கின்றதைக் காண்கின்றார் (1 நாளா. 21:20). அவர் நடுநடுங்கும் குரலில், "ராஜாவாகிய என் ஆண்டவன் இதை வாங்கிக் கொண்டு, தம்முடைய பார்வைக்கு நலமானபடி பலியிடுவாராக ... அர்வனா ராஜயோக்கியமாய் அவை எல்லாவற்றையும் ராஜாவுக்குக் கொடுத்த பின்பு ..." (2 சாமு. 24:22, 23). தாவீது தமது தலையை [எதிர்மறையாக] அசைக்கின்றார். "அப்படியல்ல; நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகன பலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக் கிரயமாய் வாங்குவேன்" (2 சாமு. 24:24) என்றார். விலை படிகிறது. பணம் கைமாறுகிறது.[24]

காட்சி மாறுகிறது. தாவீது மண்ணினாலும் கற்களினாலும் கட்டப்பட்டுள்ள ஒரு பலிபீடத்தின் முன்பாக மண்டியிட்டிருக்கின்றார். அந்தப் பலிபீடத்தின்மேல், நெருப்புத் தழலின் நடுவில் எரிக்கப்பட்ட ஒரு எருதின் எஞ்சிய பாகங்கள் இருக்கின்றன. திடீரென்று வானத்திலிருந்து அக்கினி இறங்கி அந்தப் பலிப் பொருளை மூடுகிறது.[25] தாவீது மேலே கண்ணோக்குகின்றார். தூதன் தமது பட்டயத்தை உறையிலே திரும்பப் போட்டு (1 நாளா. 21:27, 28அ) பார்வையிலிருந்து மறைகின்றார். மேகங்கள் கலையத் தொடங்குகின்றன, சூரியன் நன்றாய்ப் பிரகாசிக்கிறது. நாம், வர்ணனையாளின் குரலைக் கேட்கின்றோம்: "இவ்விதமாக, அந்தப் பயங்கரமான கொள்ளைநோய் முடிவுக்கு வந்தது - ஆனால் அதற்கு முன்பே 70,000 பேர் இறந்து போயிருந்தார்கள்! இது இஸ்ரவேலின் நீண்ட வரலாற்றில் மகாப் பேரழிவாக நிலைநிற்கிறது!"

புகைப்படக் கருவி திரும்பவும் [தொலைக்காட்சி] நிலையத்திற்கு நம்மை அழைத்துச் செல்லுகிறது. Ura கவலையுடன்/தீவிரமாக பேசுகின்றார். "உண்மையில் இந்த வரலாறு புதிரான பல அம்சங்களைக் கொண்டுள்ளது. தாவீது ஏன் ஜனத்தொகைக் கணக்கெடுக்க வேண்டும் மற்றும் அப்படி எடுப்பதால் அது எப்படி பாவமாகும் என்பதை நியாயப் பிரமாணப் போதகர்கள் கூட ஒப்புக்கொள்வது இல்லை. தாவீது, தமது சிந்தையில், வரிவிதிப்பை ... அல்லது கட்டாயப் படைப்பணியமர்த்துதல் என்பதை ... அல்லது கட்டிடம் கட்டும் திட்டங்களுக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட உடல் உழைப்பை நினைத்துக் கொண்டிருந்திருப்பார் என்று சிலர் நினைக்கின்றார்கள்."[26]

Ima கொட்டாவி விடுகின்றார். "அதைப் பற்றி யாருக்குக் கவலை?

*தாவீது பெரும்பாவம் செய்தார், 70,000 பேர் இறந்து போனார்கள்!"*

Ura *அதிர்ச்சியடைந்தவராகக் காணப்படுகின்றார். "ஆனால் தேவன் அவரை மன்னித்தாரே. நீங்கள் ஏன் மன்னிக்கக் கூடாது?"*

Ima *முரட்டுப்பிடிவாதம் உள்ளவராகக் காணப்படுகின்றார். "ஒரு சில மாடுகளைக் கொன்று, அவற்றின் சிதிலத்தின் கீழ் நீங்கள் 70,000 மரணங்களை நீக்கிப் போட்டுவிட முடியாது. இது ஒரு வீழ்ச்சி!"*

***உயிர் பிழைத்திருப்பவர் (1 நாளா. 22:1-27:34)[27]***

*புகைப்படக் கருவி வர்ணனையாளரிடமாய்த் திரும்புகிறது: "அர்வனாவின் தூற்றுகளத்தில் நடந்ததை தாவீது, தேவனுடைய கிருபையின் மாபெரும் வெளிப்பாடாக - தேவனுடைய வீட்டிற்கான நோக்கத்தின் ஒரு முன் நிழலிடுதலாகக் கண்ணோக்கினார்: அதாவது, [தேவனுடைய வீடு என்பது] தேவனுடன் ஒப்புரவாகுவதற்கான இடமாக உள்ளது. ராஜாவிடம் தேவன் பேசியிருந்தார். இந்த இடத்தில்தான் ஆலயம் கட்டப்பட வேண்டும்."*

*திரை நம்மை அர்வனாவின் தூற்று களத்திற்குத் திரும்ப அழைத்துச் செல்லுகிறது. தாவீது எழுந்து நின்று உணர்வூட்டப்பட்ட குரலில் பின்வருமாறு கூறுகின்றார்: "தேவனாகிய கர்த்தருடைய ஆலயம் இருக்கும் ஸ்தலம் இதுவே." பலி செலுத்தியிருந்த இடத்தைச் சுட்டிக்காண்பித்து, அவர் "இஸ்ரவேல் பலியிடும் சர்வாங்க தகன பலிபீடம் இருக்கும் ஸ்தலமும் இதுவே" என்றார் (1 நாளா. 22:1).*

*அடுத்து வரும் காட்சிகளில் நாம், தாவீது பின்வரும் பொருட்களைச் சேகரித்துக் குவித்து வைப்பதை காண்கின்றோம்: திரளான பொன், வெள்ளி, இரும்பு மற்றும் வெண்கலம்; "எண்ணில் அடங்காத" கேதுரு மரங்கள்; பணி தீர்ந்த கற்களின் மாபெரும் குவியல். வர்ணனையாளரின் குரல் ஒலிக்கிறது: "உடன்படிக்கைப் பெட்டியை வைப்பதற்கென்று நிரந்தரமான வீடொன்றைக் கட்டும்படி தாவீதைத் தேவன் அனுமதிக்கவில்லை என்பது தாவீதின் பெரிய ஏமாற்றங்களில் ஒன்றாக இருந்தது. அந்தக் கனவு தாவீதின் நெஞ்சில் இன்னமும் கனன்று கொண்டிருந்தது. தாவீதின் வாழ்வின் கடைசிப் பத்து ஆண்டுகள் அந்த மாபெரும் தேவாலயத்தைக் கட்டுவதற்கு ஆயத்தம் செய்வதற்கென்றே ஒப்புவிக்கப்பட்டன."*

*காட்சியானது ஒரு பொருள் வைப்பறைக்கு மாறுகிறது. தாவீது, விலையுயர்ந்த உலோகங்கள் ஏராளமாகக் குவித்து வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு முன்பாக நிற்கின்றார். அவருக்கு அருகில் அரச உடை அணிந்த ஒரு இளைஞர் நிற்கின்றார். அவ்விருவருக்கும் முன்பாகப் பல மனிதர்கள் நிற்கின்றார்கள். வர்ணனையாளர் தொடருகின்றார்: "இந்தக் கனவைத் தாவீது தமது மகனான சாலொமோனிடத்திலும் நாட்டின் தலைவர்களிடத்திலும் பகிர்ந்து கொண்டார்." தாவீது அந்த இளைஞரின் தோளில் தமது கையைப் போட்டு, பின்வருமாறு பேசுகின்றார்:*

> *என் குமாரனே, நான் என் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட என் இருதயத்தில் நினைத்திருந்தேன். ஆனாலும்*

*கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி: "நீ திரளான இரத்தத்தைச் சிந்தி, பெரிய யுத்தங்களைப் பண்ணினாய்; நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம்; ... இதோ, உனக்குப் பிறக்கப்போகிற குமாரன் அமைதியுள்ள புருஷனாயிருப்பான்; ... ஆகையால் அவன் பேர் சாலொமோன் [அல்லது சமாதானம் நிறைந்தவன்] என்னப்படும்; ... அவன் என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்" (1 நாளா. 22:7-10).*

*காட்சி அரியணை அறைக்கு மாறுகிறது. தாவீதின் முடி மிகவும் குறைந்து காணப்படுகிறது; அவர் தாடியானது ஒரு சிறு வைக்கோல் கற்றைப் போல் காணப்படுகிறது. தாவீதின் அரியணைக்கு வலது புறம் இரண்டாவது அரியணையொன்று வைக்கப்பட்டுள்ளது. ராஜாவுக்கு முன்பாக சாலொமோன் இருக்கின்றார். பல ஆசாரியர்கள் உட்பட மற்றவர்களும் அங்கிருக்கின்றார்கள். வர்ணனையாளர் விவரிக்கின்றார்: "தாவீது முதியவராகி விட்டதால், அவர் சாலொமோனை அடுத்த ராஜாவாக அபிஷேகம் செய்வித்திருந்தார்."[28] தனிப்பட்ட ஒரு வைபவத்தில், தாவீது சாலொமோனை மண்டியிடுமாறு சைகை செய்கின்றார். ஒரு ஆசாரியர், அந்த இளைஞரின் தலையில் எண்ணெயை ஊற்றுகின்றார். சாலொமோன் தமது தந்தையின் அருகில் இருந்த அரியணையில் அமருகின்றார்.*

*வர்ணனையாளர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "இப்பொழுது முதல், சாலொமோன் தேவாலயம் கட்டுவதற்கான திட்டம் மற்றும் தயாரிப்பு, ஆலயத்தின் பராமரிப்பு மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்குத் தேவையான ஒருங்கமைப்புப் பணிகள் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருந் தார்." கல்செதுக்கும் இடங்களிலும், அரியணை அறையிலும், பதிவேடு களைக் கண்ணோக்குவதில் தாவீதும் சாலொமோனும் அருகருகாகக் காண்பிக்கப்படுகின்றார்கள்.*

*நாம் [தொலைக்காட்சி] நிலையத்திற்குத் திரும்புகையில்* Ima, Ura *விடம் பேசிக் கொண்டிருக்கின்றார்: "என்னிடம் கூறாதீர்கள்! என்னிடம் கூறாதீர்கள்! தேவன் [நீ ஆலயம் கட்டக்] 'கூடாது' என்று கூறியதற்காக தாவீது [பொறுப்பை விட்டு] வெளியேறாதிருந்தமைக்காகப் பாராட்டப் பட வேண்டியவராக இருக்கின்றார். நான் உயர்ச்சிகளுடன் ஒன்றா யிணைந்து செல்வேன். தனிப்பட்ட முறையில் நான், அவர்கள் இருக்கப் போவதாகக் கூறிய இந்த ஆலயம் அதில் பாதியளவாவது இருந்ததா என்று காண ஆர்வமாய் இருக்கின்றேன்!"*

***வாரிசு உரிமை (1 இரா. 1:1-53; 1 நாளா. 28:1-29:25)[29]***

*பற்களுடன் இருக்கும் மனிதர் மீண்டும் திரைக்கு வருகின்றார். அறையை விட்டு நாம் வெளியே வருகையில், அவர் "அர்வானாவின் தூற்று களத்தில் மிகச் சிறந்த மனையிடங்கள் இன்னும் பல உள்ளன. கட்டப்படப் போகின்ற தேவாலயத்தைக் கண்ணில் பார்த்துக் கொண்டே இருக்கும் வகையில் அங்கு ஒரு வீட்டைச் சொந்தமாக்கிக் கொள்ளுதல் என்பது உங்கள் விருப்பத் தேர்வாக உள்ளது!" என்று அவர் கூறுவதை நாம் கேட்கின்றோம்.*

நாம் திரும்பும்போது, வர்ணனையாளர் பேசிக் கொண்டிருக்கின்றார். அவர் வீரார்ந்த வகையில், "நாம் இப்பொழுது ராஜாவின் கடைசி நாட்களுக்கு வருகின்றோம். அவரது உடல் நலம் பாதிக்கப்படத் தொடங்குகிறது, ஆனால் அவரது விசுவாசம் பலமாக உள்ளது." தாவீதின் சங்கீதங்கள் ஒன்றிலிருந்து பின்வரும் வார்த்தைகள் திரையில் பளிச்சிடுகின்றன: "நான் இளைஞனாயிருந்தேன்; முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்காக இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை" (சங். 37:25).

இப்பொழுது நாம் ராஜாவின் படுக்கையறைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றோம். படுக்கை விரிப்புகள் உயரமாய் அடுக்கிக் குவித்து வைக்கப்பட்டுள்ளன, ஆனால் தாவீது வயதான காரணத்தால் [முகம்] வெளுத்துச் சுருங்கியவராக, [ஜுரம்] நடுக்கத்தினால் படுக்கையை அதிர வைத்துக் கொண்டுள்ளார். வர்ணனையாளர், "ராஜா [தமது வாழ்வின்] முடிவை நெருங்கிக் கொண்டிருப்பதால், அவர் சுகவீனமாகவும் பலவீனமாகவும் ஆகி, குளிரினால் மிகவும் துன்புற்றுக் கொண்டிருக்கின்றார். சூனேமியப்[30] பெண்ணாகிய அழகு மிகுந்த அபிஷாக், ராஜாவுக்குப் பணிவிடை செய்யவும் அவருக்குச் சூடு உண்டாக்கவும்[31] அவரது அந்தப்புறத்தில்[32] சேர்க்கப்பட்டிருக்கின்றாள்." அழகு மிகுந்த இளம் பணிப்பெண்ணொருத்தி படுக்கையறைக்குள் கொண்டு வரப்படுகின்றாள். அவள் ராஜாவுக்கு உணவூட்டத் தொடங்குகின்றபோது, வர்ணனையாளர் "தாவீது ஏற்கனவே நாட்டு விஷயங்கள் பலவற்றை சாலொமோன் கவனிக்கும்படி அவரிடத்தில் திருப்பி விட்டிருந்தார். அவர் தமது எஞ்சியுள்ள கடைசி நாட்களை அழகுமிகுந்த அபிஷாகுடன் அமைதியாகச் செலவிடலாம் என்று நினைத்திருப்பார் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. ஆனால் அது அவ்வாறு இராதிருந்தது."

காட்சியானது, தமது முப்பது வயதுகளில் இருந்த வனப்புமிகுந்த மனிதரை நோக்கித் திரும்புகிறது, அவர் தமது இரதத்தில் அரண்மனை வீதியில் பயணிக்கின்றார். வலிவான தசைகள் கொண்ட இளம் மனிதர்கள் டஜன் கணக்கில் அந்த இரதத்துடன் ஓடுகின்றார்கள். "தாவீது இனியும் நீண்ட காலம் உயிர் வாழமாட்டார் என்பது உறுதியான வேளையில், அவரது மகன் அதோனியா அரியணைக்கு உரிமைகோரினார். தாவீது ஏற்கனவே தமது தேர்வாக சாலொமோனைக் குறிப்பிட்டிருந்தார்,[33] ஆனால் அது அதோனியாவைப் பொறுத்தமட்டில் எந்த மாறுபாட்டையும் ஏற்படுத்திவிடவில்லை. [தாவீதுக்கு] உயிருடன் இருந்த மகன்களில் அவரே மூத்தவராயிருந்தார்,[34] அவர், தாமே அரசராக வேண்டும் என்று நினைத்தார்."[35]

அதோனியா இரு மனிதர்களுடன் ஆலோசனை செய்பவராகக் காணப்படுகின்றார். அவர்களில் ஒருவர் நாம் இதற்கு முன்பு கண்ட மூர்க்கமான முதிர்வயதான போர்வீரராயிருக்கின்றார். இன்னொருவர் ஆசாரியத்துவ உடையில் இருக்கின்றார். வர்ணனையாளர் தொடருகின்றார்: "அதோனியா, நாட்டில் மிகச் சிறந்த வகையில் அறியப்பட்ட இருவரின் உதவியை அடைந்தார்: அவர்கள் யாரெனில், படைத் தளபதியாகிய

*யோவாபும், பிரதான ஆசாரியரான அபியத்தாருமே ஆவார்கள்.[36] சரியான வேளை வந்ததென்று அதோனியா நினைத்தபோது, அவர் தமது ஆதரவாளர்களுக்குக் கீதரோன் சமவெளியில் என்ரோகேல் (இது ரோகேலின் ஊற்று என்று அர்த்தப்படுகிறது) என்ற இடத்தில் ஒரு பெரிய விருந்தை அளித்தார்."[37]*

*காட்சியானது பெருகியோடும் ஒரு நீரூற்றண்டையில் உள்ள ஒரு பசுமையான சமவெளிக்கு மாறுகிறது. எருசலேமின் மதில்கள் பின்னணியில் மங்கலாகத் தெரிகின்றன. உணவு வைக்கப்பட்டுள்ள நீண்ட மேஜைகள் பரப்பப்பட்டுள்ளன, அவற்றைச் சுற்றி மக்கள் சிரித்துக் கொண்டும் உணவருந்திக் கொண்டும் இருக்கின்றார்கள். அதோனியாவும், ஆசாரியத்துவ உடையில் இருந்த ஒரு மனிதரும் ஒரு உயர்ந்த மேட்டிற்குச் செல்லுகின்றார்கள். அதோனியா மண்டியிடுகின்றார், ஆசாரியர் அவரது தலையில் தைலத்தை ஊற்றுகின்றார். எல்லா மக்களும், "ராஜாவாகிய அதோனியா வாழ்க!" என்று முழக்கமிடுகின்றார்கள் (1 இரா. 1:25).*

*திரையின் மீதுள்ள காட்சியானது [இப்பொழுது] அரண்மனையின் உள்ளிருக்கும் ஒரு அறையை நோக்கித் திரும்புகிறது. முரட்டு உடையணிந் திருந்த ஒரு மனிதர், நாற்பது வயதுகளில் இருந்த ஒரு அழகிய பெண்ணுடன் பேசிக் கொண்டிருக்கின்றார். வர்ணனையாளரின் குரல், "என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைத் தீர்க்கதரிசியான நாத்தான் கேள்விப்பட்ட போது, அவர் சாலொமோனின் தாயாகிய பத்சேபாளிடத்தில் துரிதமாய்ச் சென்றார். அவ்விருவரும் இணைந்து தாவீதிடம் சென்றார்கள்'' என்று கூறுகிறது.*

*நாம் தாவீதை அவரது படுக்கை அறையில் காண்கின்றோம். படுக்கையில் இருக்கும் ராஜாவுக்கு அபிஷாக், ஒரு புத்தகச் சுருளில் இருந்து வாசித்துக் கொண்டிருக்கின்றாள். பத்சேபாள் திடீரென்று அறைக்குள் வந்து, தாழ்ந்து பணிகின்றாள், பின்பு என்ன நடந்து கொண்டுள்ளது என்பதைத் தாவீதுக்கு உணர்வுப் பெருக்குடன் உரைக்கின்றாள்.[38] அப்போது நாத்தானும் உள்ளே வந்து அவள் கூறுவதை ஆதரித்துப் பேசுகின்றார். கலவரமடைந்த தாவீது, "ஆசாரியனாகிய சாதோக்கையும், ... யோய்தாவின் குமாரன் பெனாயாவையும் என்னிடத்தில் வரவழையுங் கள்'' (1 இரா. 1:32) என்று கூறுகின்றார். அந்த இரு மனிதர்களும் வருகின்றார்கள். தாவீது உறுதியான குரலில் பின்வருமாறு கூறுகின்றார்:*

> *நீங்கள் உங்கள் ஆண்டவனுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு, என் குமாரனாகிய சாலொமோனை என் கோவேறுக்கழுதையின்மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு அழைத்துக் கொண்டு போங்கள். அங்கே ஆசாரியனாகிய சாதோக்கும் தீர்க்கதரிசியாகிய நாத்தானும் அவனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணக்கடவர்கள்; பின்பு எக்காளம் ஊதி, ''ராஜாவாகிய சாலொமோன் வாழ்க'' என்று வாழ்த்துங்கள் (1 இரா. 1:33, 34).*

*தாவீதின் கோவேறுக் கழுதையின்மீது ஏறிய சாலொமோன், தெருக்களினூடே பயணிக்கின்றார். அரசக் குழுவினர் நகருக்கு வெளியே*

*செல்லுகையில், உணர்வெழுச்சி கட்டியெழுப்புகிறது. விரைவில், நகரத்து மக்கள் அனைவரும் கிழக்கு வாயிலுக்குப் பாய்ந்தோடுகின்றார்கள்.*

*நகரத்தின் மதில்களுக்கு வெளிப்புறத்தில் இருந்த உயர்ந்த சரிவு ஒன்றில் சாலொமோன் நிற்கின்றார். அவர் மண்டியிடுகின்றார், ஒரு கொம்புக் குழலில் இருந்து தைலம் அவரது தலையின் மீது ஊற்றப்படுகிறது. ஒரு எக்காளம் முழங்குகிறது. "ராஜாவாகிய சாலொமோன் வாழ்க!" என்று மக்கள் எல்லாரும் ஆரவாரம் செய்கின்றார்கள் (1 இரா. 1:39). அந்த சத்தம் [அதன்] வலிவில் உயருகிறது. சிலர் இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டு [அவரைச்] சுற்றி வந்து நடனமாடுகின்றார்கள்; சிலர் அவர்களின் பாதங்களை மிதித்துக்கொண்டு இருக்கின்றார்கள்; எல்லாரும் ஆரவாரம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.*

*வர்ணனையாளர் திரும்பவும் திரையின் மீது வருகின்றார். "அங்கிருந்து தெற்கே அரைமைல் தூரத்தில் அதோனியாவின் விருந்தில் [இருந்தவர்கள்] கேட்கும் அளவுக்கு, அந்தச் சத்தம் மிகவும் பெரியதாக இருந்தது. அவரது ஆதரவாளர்கள் தங்கள் பசியைத் தொலைத்தவர்களாய்த் தப்பியோடி விட்டார்கள். அதோனியா, யோவாப் மற்றும் அபியத்தார் ஆகியோர், மீதமாயிருந்த ஏராளமான உணவுப் பொருட்களுடனும் தங்கள் வயிற்றின் ஆழங்களில் குளிர்ந்த, கடினமான பயங்களுடனும் [தனிமையில்] விடப் பட்டார்கள் [இந்த மூன்று சூழ்ச்சியாளர்களின் முடிவுகள் 1 இரா. 2ல் பதிவு செய்யப்பட்டுள்ளன]. அதோனியாவின் கலகம், அது தொடங்கியது போலவே விரைவாக முடிந்தும் போயிற்று. இஸ்ரவேல் ஒரு புது ராஜாவைக் கொண்டிருந்தது. சாலொமோன் அரியணைமீது வீற்றிருந்தார்."[39]*

*மீண்டும் காட்சி மாறுகிறபோது, தாவீது அரண்மனையின் உப்பரிகை ஒன்றில் நின்றுகொண்டு இருக்கின்றார். அவரது ராஜ உடையானது அவரது மெலிவான உடல் சட்டகத்தின் மீது தளர்வாகத் தொங்கிக் கொண்டுள்ளது. கீழே ஒரு மாபெரும் கூட்டம் உள்ளது. வர்ணனையாளர் விளக்குகின்றார். "கர்த்தரிடத்திலிருந்து பலம் பெற்றுக் கொண்ட தாவீது தமது வியாதிப் படுக்கையில் இருந்து எழுந்து, புது ராஜாவுக்கு ஆதரவு அளிக்கும்படியும் தேவனுடைய ஆலயத்தைக் கட்டும்படியும் மக்களுக்குக் கட்டளை யிட்டார்." மக்களை அமைதிப்படுத்தத் தாவீது தமது மெலிந்த கையை உயர்த்துகின்றார். அவர் ஒரு பலவீனமான, ஆனால் உறுதியான குரலில் பேசுகின்றார்:*

> *என் சகோதரரே, என் ஜனமே, நான் சொல்வதைக் கேளுங்கள்; ... கர்த்தர் எனக்கு அநேகம் குமாரரைத் தந்தருளினார்; ஆனாலும் இஸ்ரவேலை ஆளும் கர்த்தருடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தின் மேல் உட்காருகிறதற்கு, அவர் என்னுடைய எல்லாக் குமாரரிலும் என் குமாரனாகிய சாலொமோனைத் தெரிந்துகொண்டு, அவர் என்னை நோக்கி: "உன் குமாரனாகிய சாலொமோனே என் ஆலயத்தையும் என் பிரகாரங்களையும் கட்டக்கடவன்; அவனை எனக்குக் குமாரனாகத் தெரிந்து கொண்டேன்; நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன் ..." இப்போதும் நீங்கள் என்றென்றைக்கும் இந்த நல்ல தேசத்தைச் சுதந்தரமாய் அனுபவித்து, உங்களுக்குப் பிறகு அதை உங்கள்*

*பிள்ளைகளுக்குச் சுதந்தரமாய்ப் பின்வைக்கும் பொருட்டாக, நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் கைக் கொண்டு விசாரியுங்கள் என்று கர்த்தரின் சபையாகிய இஸ்ரவேல் அனைத்தின் கண்களுக்கு முன்பாகவும், நமது தேவனுடைய செவி கேட்கவும் உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன் (1 நாளா. 28:2-8).*

*தாவீது தமது உரையைத் தொடருகையில், வர்ணனையாளரின் குரல் கேட்கப்பட முடிகிறது. "தாவீது சாலொமோனுக்கும் ஒரு கட்டளை கொடுத்து, தேவாலயத்தைக் கட்டும் பணியை முறைப்படி அவருக்கு ஒப்பு வித்தார். மக்களின் தலைவர்கள் சாலொமோனை ஆதரிக்கவும், தேவாலயத் தைக் கட்டி எழுப்பவும் உறுதிப்பாடு அளிக்கும்படி தாவீது கேட்டு - அதைப் பெற்றுக் கொண்டார். பலிகள் செலுத்தப்பட்டு ஒரு பெரிய பண்டிகை ஆசரிக்கப்பட வேண்டும் என்று அவர் கட்டளையிட்டார். அது இஸ்ர வேலின் வரலாற்றிலேயே மாபெரும் நாட்களில் ஒன்றாக இருந்தது - மற்றும் அது தாவீது வெளியரங்கமாகத் தோன்றிய கடைசி முறையாக இருந்தது."[40]*

*புகைப்படக் கருவி நம்மை [தொலைக்காட்சி] நிலையத்திற்குத் திரும்பவும் அழைத்துச் செல்லுகிறது, அங்கு வெற்றிகரமான* Ura *தமது இரண்டு கட்டை விரல்களையும் உயர்த்திக் கொண்டிருக்க, துயரார்ந்த* Ima *வெட்டவெளியில் பார்வையைச் செலுத்துகின்றார்.*

***மறையும் அறிகுறி (2 சாமு. 23:1-7; 1 இரா. 2:1-9)***

*நாம் மீண்டும் தாவீதின் படுக்கை அறைக்கு அழைத்துச் செல்லப் படுகின்றோம். சாலொமோன் தமது தந்தையின் படுக்கைக்கு முன்பாக மண்டியிட்டு இருக்கின்றார். வர்ணனையாளர் பின்வருமாறு கூறுகின்றார்: "தாவீதின் [இந்த] வெளியரங்கமான தோற்றத்திற்குப் பின்பு, அவரது உடல்நிலை விரைவில் சீரழிகிறது. அவர் [தமது] முடிவை நெருங்குகையில், சாலொமோனைத் தம்மருகில் அழைத்தார். அவர் தம்மிடம் நட்புறவாய் இருந்தவர்களை மறவாதிருக்கும்படி தமது மகனுக்குக் கட்டளையிட்டார் (1 இரா. 2:7). அவர், சாலொமோனின் ஆட்சியைத் தங்கள் செல்வாக்கினால் மதிப்புக் குறைய வைக்கக்கூடிய மனிதர்களை குறித்துத் தமது மகனுக்குக் எச்சரிக்கை செய்தார்.[41] எல்லாவற்றிற்கும் மேலாக, தாவீது சாலொமோனைக் கர்த்தருக்கு உண்மையுள்ளவராக இருக்கும்படி அறைகூவல் விடுத்தார்." தாவீது தமது கரங்களை சாலொமோனின் தலைமீது வைத்து ஆசீர்வதித்து, பின்வருமாறு கூறுவதைக் கவனிக்கின்றோம்:*

*நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன்; நீ திடன்கொண்டு புருஷனாயிரு. நீ என்ன செய்தாலும், நீ எங்கே போனாலும், எல்லாவற்றிலும் புத்திமானாயிருக்கிறதற்கும், கர்த்தர் என்னைக் குறித்து: உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக்கொண்டால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு*

> *இல்லாமற் போவதில்லை என்று சொன்ன தம்முடைய வார்த்தையைத் திடப்படுத்துகிறதற்கும், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி, நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளை களையும், கற்பனைகளையும், நியாயங்களையும், சாட்சிகளையும் கைக்கொள்ள, அவர் வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக் காப்பாயாக (1 இரா. 2:2-4).*[42]

*தாவீது தமது கண்களை வானத்தை நோக்கி உயர்த்தி, மென்மையாகப் பாடத் தொடங்குகின்றார்.*[43]

> *இஸ்ரவேலின் தேவனும் இஸ்ரவேலின் கன்மலையுமானவர் எனக்குச்*
> *சொல்லி உரைத்ததாவது:*
> *"நீதிபராய் மனுஷரை ஆண்டு, தெய்வபயமாய்த் துரைத்தனம்*
> *பண்ணுகிறவர் இருப்பார்.*
> *அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து ... [எழும்புகிற]*
> *சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போல இருப்பார் ..."*
> *என்னுடைய வீடு தேவனிடத்தில் இப்படியிராதோ?*
> *... நித்திய உடன்படிக்கையை என்னுடன் அவர் செய்திருக்கிறார்*
> *(2 சாமு. 23:3-5).*

*தாவீது தமது கண்களை மூடுகின்றார். சாலொமோன் தமது தந்தையைக் கட்டி அணைத்துக் கொள்கின்றார். திரை மெதுவாக மறைகையில் வர்ணனையாளர், "இதன் பின்பு விரைவிலேயே தாவீது இந்த வாழ்வி லிருந்து அமைதியாக நழுவிச் செல்லுகின்றார். தாவீது ராஜாவின் நாற்பது ஆண்டுகால ஆட்சி முடிவடைந்தது. எழுபதாண்டுகள் இந்த பூமியில் [அவரால் வாழ்ந்து] முடிக்கப்பட்டன. இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடினவர் இறந்து போனார்."*

*நாம் நமது கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுகையில், [தொலைக் காட்சி] நிலையத்திற்குத் திரும்பியதால் குலுக்கப்படுகின்றோம். கோபம் கொண்ட* Ima *தமது கை முஷ்டியைக் குலுக்குகின்றார். "வெள்ளை அடிக்கும் வேலை பற்றிப் பேசுகின்றார்! யோவாபையும் சீமேயியையும் ஒழித்துக் கட்டும்படி தாவீது சாலொமோனிடம் கூறியதை நான் அறிய நேரிடுகிறது! இது ஒரு முற்றுப்புள்ளியாக உள்ளது!"*

Ura *"நல்லது, யோவாப் அதோனியாவின் சூழ்ச்சியில் அங்கம் வகித்திருந்தாரே" என்று எதிர்க்கின்றார்.*

*"இருக்கலாம், ஆனால் சீமேயியைப் பற்றிய விஷயம் என்ன? தாவீது சீமேயியைக் கொல்வதில்லை என்று வாக்களித்திருந்தாரே."*

*"ந-ல்-ல-து, ஒருவேளை தாவீது சீமேயிக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுத்தபின்பும் கூட, அவர் தாவீதின் ஆட்சியை மதிப்புக் குறைய வைப்பதற்குத் தொடர்ந்திருக்கலாம்."*[44]

Ima *உறுமுகின்றார். "நீங்கள் உண்மையில் 'ஒருவேளை' என்ப வற்றினால் இன்று நிரப்பப்பட்டுக் காணப்படுகின்றீர்கள்! உண்மைகளின் அடிப்படையில், இது ஒரு வீழ்ச்சியாகவே உள்ளது."*

Ura *கணக்கிடும் பலகையை உற்று நோக்குகின்றார். "சரிதான், ஆனால்*

*நீங்கள் கூட்டிக் காணும்போது, உயர்ச்சிகளின் எண்ணிக்கை வீழ்ச்சிகளின் எண்ணிக்கையை விட அதிகமாக உள்ளது.”*

Ima *பற்கடிக்கின்றார், “மொத்தம் எண்ணிக்கை என்ன என்று கவலைப் பட்டது யார்? இவர் தலைப்புச் செய்தியில் இடம்பெற்ற நபராயிருக் கின்றார், இவர் அவ்வளவு பெரிய மனிதராக இருக்க வேண்டும் என்பது தானே* [*எல்லாருடைய*] *அனுமானமாக இருக்கிறது! இவர் தமது சொந்தக் கல்லறையைத் தொடங்கக்கூடிய அளவு, தமது பெட்டியில் போதிய அளவுக்கு எலும்புக் கூடுகளைக் கொண்டிருந்தாரே!”*

Ura *திருப்பித் தாக்குகின்றார்: “எனவே அவர் பூரணப்பட்டவர் அல்ல! நீங்கள் அப்படியிருக்கிறீர்கள் என்று நீங்கள் உரிமைகோருகின்றீர்களா?”*

Ima *பதிலுக்குத் தாக்குகின்றார்: “நல்லது, தாவீது எவ்வளவோ நல்லவராயிருந்தார் என்று நான் நிச்சயித்துள்ளேன். உண்மையில் …”*

Ima *என்ன கூற வந்தார் என்பதை நாம் ஒருக்காலும் அறிய மாட்டோம், ஏனென்றால் திடீரென்று தோன்றிய பிரகாசமுள்ள ஒரு வெளிச்சமானது தொலைக்காட்சி நிலையத்தை நிரப்புகிறது, தமது ஆத்துமாக்களை ஊடுருவிச் செல்லும் ஒரு குரல், பின்வருமாறு உரைக்கிறது:* “Ima, Ura *அமைதியாக உட்காருங்கள். நீங்கள் இருவருமே* [*இவ்விஷயத்தில்*] *சரியானவர்கள் அல்ல. உங்களில் ஒருவர் எப்போதுமே தாவீதைத் தற்காக்கத் தயாராக இருக்கின்றீர்கள்; இன்னொருவர் எப்போதுமே அவரைக் கண்டனம் பண்ணத் தயாராக இருக்கின்றீர்கள். உங்களில் எவரும், நான் காண்கிறதுபோல காண்பது இல்லை, ஏனெனில் மற்ற எல்லாவற்றைப் பார்க்கிலும், இருதயத்தையே நான் அதிகமாய்க் கண்ணோக்குகின்றேன். தாவீது என் இருதயத்திற்கு ஏற்ற மனிதராயிருந்தார்!”* Ima Critic, Ura Critic *ஆகியோரை நாம் கடைசியாகக் காண்கையில், அவர்கள் திகைப்புடன் உற்று நோக்கி, திறந்த வாயுடன் விழிக்கின்றார்கள், கற்களாக மாறியது போல் அசைவற்று நிற்கின்றார்கள். பின்பு தொலைக்காட்சிப் பெட்டி வெடிக்கின்றது.*

## தாவீதைப்பற்றி தேவனின் கடைசி வார்த்தை

*அந்தக் கடைசிக் காட்சியில் நான் என்னை அதிகமாய் மனம்போன போக்கில் போகும்படி அனுமதித்திருக்கலாம், ஆனால் நான் ஒரு கருத்தை வெளிப்படுத்தவே விருப்பம் கொண்டேன்: அது, தாவீதைப் பற்றி கடைசி வார்த்தை கொடுக்க வேண்டியவர்கள் நாமல்ல, ஆனால் அது தேவனு டையதாகவே இருக்க வேண்டும். நமது பாடத் தொடரை முடிக்கின்ற இவ்வேளையில், தாவீதின் வாழ்வைத் தேவன் எவ்வாறு எடை போட்டுப் பார்த்தார் என்பதை மறுகண்ணோட்டமிட நாம் ஒரு சில நிமிடங்களை எடுத்துக் கொள்வோம்.*

*தேவன் சவுலை ராஜாவாயிராதபடி தள்ளிவிட்ட வேளையில் சாமுவேல் கூறியவற்றைத் துணையாக எடுத்துக்கொண்டு நாம் தொடங்குவோம்: “இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது;*

*கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத்தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்" (1 சாமு. 13:14).*

அடுத்த ராஜாவை அபிஷேகம் செய்வதற்காக சாமுவேல், பெத்லே கேமிலிருந்த ஈசாயின் இல்லத்திற்கு முதலாவதாகச் சென்றபோது, அந்த முதிய நியாயாதிபதி, ஈசாயின் மூத்த மகன்களில் நல்ல தோற்றம் கொண்ட ஒருவர் அடுத்த ராஜாவாயிருப்பார் என்று நினைத்தார்; ஆனால் தேவன், "நீ இவனுடைய முகத்தோற்றத்தையும், சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம், நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; *கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்"* (1 சாமு. 16:7) என்று கூறினார்.

நமது பாடத்தொடரில், நாம் தாவீதின் நல்ல நாட்களில் அவருடன் ஓடி, அவரது மோசமான நாட்களில் அவருடன் ஊர்ந்து கொண்டிருந்துள்ளோம். அவ்வாறு நாம் செய்திருக்கையில், "மனுஷன் முகத்தைப் பார்க்கிறான்" என்ற தேவனுடைய குற்றச்சாட்டைக் குறித்து, நான் குற்றமுள்ளவனாக இருந்த விஷயத்தை நான் அறிக்கையிடுகின்றேன். நம்மில் பெரும்பாலான வர்கள் கிருபாசனத்தைக் காட்டிலும் நியாயாசனத்தை அதிகம் வசதியான தாக உணருகின்றோம் என்று கூறப்பட்டுள்ளது - இது உண்மையான தாகவே உள்ளது. தாவீதின் வாழ்வைப் பற்றிப் படிக்கும்போது, இரு விஷயங்களை மறந்து போவது என்பது மிகவும் சுலபமாயுள்ளது: (1) நாம் தாவீதை நியாயந்தீர்ப்பதாயிருந்தால், அது புதிய ஏற்பாட்டின் தராதரங் களின் படியானதாயிராமல், அவர் வாழ்ந்த காலங்களின் வெளிச்சத்தினு டைய அடிப்படையில் ஆனதாயிருக்க வேண்டும். (2) தாவீதின் உயர்வு தாழ்வு ஆகிய எல்லாவற்றினூடாகவும், தேவன் தாவீதின் இருதயத்தின்மேல் அக்கறை கொண்டிருந்தார். இந்தப் பாடத்தொடரின் முதல் பாடத்தில் நான் குறிப்பிட்டிருந்த பல விஷயங்களை நான் உங்களுக்கு நினைவூட்ட அனு மதியுங்கள்:

> தாவீதின் வாழ்வு பற்றிக்கூறும் [வேதாகமத்தின்] அத்தியாயங்கள் அவரது இருதயத்தை மையப்படுத்தும் அளவை விட அதிகமாய் அவரது வரலாற்றை மையப்படுத்துவதில்லை.
>
> ... தாவீது, அருங்காட்சியகத்திலுள்ள ஒரு சலவைக்கல்லாலான பரிசுத்தவானாக இருக்கவில்லை, சூடான இரத்தம் அவரது நரம்பு களின் வழியே பாய்ந்தோடிற்று. அவரது உடலில் பலத்த உணர்வு இருந்தது. பறக்கக் கூடிய யாவரைக் காட்டிலும் தாவீது மிக உயரமாய்ப் பறந்தார். அவர் மிக பலமாகவும் கீழே விழுந்தார்.
>
> ... தாவீது தமது மிகச் சிறந்த நிலையில் இருந்த போதிலும், அல்லது அவர் தமது மிக மோசமான நிலையில் இருந்தபோதிலும், அவரது பற்றுறுதியானது எப்பொழுதும் கர்த்தரிடத்திலேயே இருந்தது. வாழ்வின் புயல்களினால் தாவீதின் ஆவிக்குரிய திசை காட்டும் கருவி அடிக்கடி தடுமாற்றம் அடைந்தாலும், அமளி ஓய்ந்தபொழுது, தாவீதின் திசைக் காட்டும் கருவியானது அவரது ஆவிக்குரிய [ஆதார] துருவத்தை - அவரது தேவனை - சுட்டிக் காண்பித்தது. [இந்தப்

*புத்தகத்தின் அறிமுகப் பாடத்தில் காணவும்*].

*தாவீதின் மரணத்திற்குச் சற்றே பிந்திய காலத்திற்கு என்னுடன் இப்போது பயணப்படுங்கள். 1 இராஜாக்கள் 3ல், தேவன் சாலொ மோனுக்கு ஒரு கனவில் தோன்றி, அவர் [சாலொமோன்] விரும்பும் எதையும் அளிப்பதாகக் கூறினார். வசனம் 14ஐக் கவனியுங்கள்: "உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல, நீயும் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொண்டு, என் வழிகளில் நடப்பாயாகில், உன் நாட்களையும் நீடித்திருக்கப் பண்ணுவேன் என்றார்." நாம் இதே போன்ற கூற்று ஒன்றை 1 இராஜாக்கள் 9ம் அத்தியாயத்திலும் காண்கின்றோம். தேவன் சாலொமோனுக்கு இரண்டாம் முறை தரிசனமாகிப் பின்வருமாறு கூறினார்:*

> *நான் உனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நீ செய்து, என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளும்படிக்கு, என் சமூகத்தில் மன உத்தமமும் செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நடப்பாயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற் போவதில்லை என்று உன் தகப்பனாகிய தாவீதோடே நான் சொன்னபடியே இஸ்ரவேலின்மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன் (வ. 4, 5).*

*இந்த இரு வசனப் பகுதிகளையும் நாம் வாசிக்கையில், திகைப்படைந்தவர்களாய்ப் பின்னோக்கிச் சாய்ந்து அமருகின்றோம். தாவீது தேவனுடைய வழிகளில் நடந்து, தேவன் கட்டளையிட்ட யாவற்றின்படியேயும் செய்தாரா? "தேவனே, ஒரு நிமிடம் பொறுங்கள். தாவீது பத்சேபாளின் விஷயத்தில் பத்துக் கட்டளைகளில் 40 சதவிகிதத்தை முறித்திருந்ததை நீர் மறந்து விட்டீரா? நீர் இஸ்ரவேலில் 70,000 பேர்களைக் கொல்லுமளவுக்கு அவர் மீதும் இஸ்ரவேல் மீதும் கோபமாயிருந்ததை மறந்து விட்டீரா?" கர்த்தர் புன்முறுவலுடன் என்னை நோக்கிப் பின்வருமாறு கேட்பதைக் கற்பனை செய்ய முடிகிறது: "ஆம், நான் மறந்து விட்டேன். நான் மன்னிக்கின்ற பாவங்களை நான் மறந்து விடுகின்றேன்.[45] நீ, எனது ஊழியக்காரனாகிய தாவீதின் எழுதுகோலில் இருந்து வந்த பின்வரும் வார்த்தைகளை மறந்து போய்விட்டாயா?"*

> *கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த*
> *கிருபையுமுள்ளவர் ...*
> *பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ,*
> *அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும்*
> *அவ்வளவு பெரிதாயிருக்கிறது.*
> *மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய்*
> *அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.*
> *தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல,*
> *கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.*

*நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்;*
*நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்.*
*(சங். 103:8-14).*

*தாவீது தேவனைத் தீவிரமாய்க் கண்ணோக்கினார். அவரது இருதயம் தேவனுடைய இருதயத்தின் பக்கமாய்த் திரும்பிற்று. தேவன் அவர்மீது அன்புகூர்ந்தார், மற்றும் தேவன் அவரை மன்னித்தார். இவ்விதமாக தேவன், "தாவீது என் வழிகளில் நடந்து, என் நியமங்களையும் கட்டளைகளையும் கைக்கொண்டார். அவர் இருதயத்தில் நேர்மையுடனும் நியாயத்துடனும் நடந்துகொண்டு, கட்டளையிடப்பட்ட எல்லாவற்றின்படியேயும் செய்தார். அவர் என் நியமங்களையும் என் ஆணைகளையும் கடைப் பிடித்திருந்தார்!" என்று கூறக்கூடும்.*

*நாம் புதிய ஏற்பாட்டின் சில வசனங்களிடத்தில் சற்றே திரும்புவோம். அப். 7ல், ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில், ஸ்தேவானின் மாபெரும் பிரசங்கத்தில் அவர் பழைய ஏற்பாட்டு வரலாற்றின் ஒரு ஆய்வை முன்னிறுத்தினார். அவர் தாவீதைப்பற்றிக் கூறவந்தபோது, "இவன் [தாவீது] தேவனிடத்தில் தயவு பெற்றபடியினால்" (வ. 46) என்று அவர் [ஸ்தேவான்] கூறினார். எனது [இதை ஆங்கில மொழியில் எழுதியவரான டேவிட் [தாவீது] ரோப்பர் அவர்களின்] கல்லறையில், ''டேவிட் [தாவீது] தேவனிடத்தில் தயவு பெற்றார்" என்ற வாசகம் அடங்கிய கல்லறைக்கல் இருப்பது பற்றி எனக்கு ஆட்சேபனையில்லை.*

*ஆயினும் பிசீதியாவின் அந்தியோகியாவில் இருந்த யூதருடைய ஜெபாலயத்தில் பவுலின் பிரசங்கத்தை எடுத்து உரைக்கும் வேத வசனப்பகுதியேயே நான் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகின்றேன்: "பின்பு அவர் [தேவன்] அவனை [ராஜாவாயிராதபடி சவுலை] த் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, 'ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன். எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் அவன் செய்வான்' என்று அவனைக் குறித்துச் சாட்சியுங் கொடுத்தார்" (அப். 13:22).* Amplified Bible *என்ற புத்தகத்தில் இவ்வசனத்தின் கடைசிப் பாகம் விரிவாக்கப்பட்டு ''ஈசாயின் மகனான தாவீது என் இருதயத்திற்கு ஏற்றவன் என்று கண்டறிந்தேன், அவன் எனது சித்தத்தின் படியெல்லாம் செய்து, எனது திட்டங்கள் யாவற்றையும் முழுமையாக நிறைவேற்றுவான்" என்றுள்ளது. பவுல் இந்த பிரசங்கத்தின் பிற்பகுதியில், "தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ் செய்த பின்பு நித்திரையடைந்து" (அப். 13:36) என்றார். நாம் வாழ்வின் முடிவை நெருங்கும் வேளையில், நாம் நமது தலைமுறையில் தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்தோம் என்று நம்மைப் பற்றி கூறப்பட்டால் அது மிகவும் அற்புதமானதாக இருக்குமல்லவா?*

*ராஜா என்ற வகையில் தாவீதைக் குறித்துத் தேவனுடைய சித்தம் என்னவாக இருந்தது? தாவீதின் ஆட்சியைக் குறித்து அவருடைய திட்டம் என்னவாக இருந்தது? தாவீதின் சாதனை நிறைவேற்றங்கள் "தேவனுக்குக் கீழ் ஒரே நாடு" என்ற சொற்றொடரினால் தொகுத்துரைக்கப்படலாம்:*

*"ஒரே நாடு" - தாவீது, பெருமையும் சுயாதீனமும் கொண்ட பன்னிரெண்டு கோத்திரங்களை சமாதானத்தில் ஒன்றுகூடி வாழும் ஒரே நாடாக ஒன்றிணைத்தார். "தேவனுக்குக் கீழ்" - தாவீது தம்மையல்ல ஆனால் யெகோவாவையே இஸ்ரவேலின் உண்மையான ராஜா என்று எப்போதும் வலியுறுத்தி வந்தார். தாவீது தமது தேவனுக்குப் போட்டியாளர்களை அனு மதித்திருந்ததில்லை. தாவீது அரியணைக்கு வரும்முன்பு, விக்கிரகாராதனை என்பது ஒரு பிரச்சனையாக இருந்தது; தாவீது மரித்த பின்பும் விக்கிர காராதனை ஒரு பிரச்சனையாக இருந்தது; அவர் ராஜாவாயிருக்கையில் அது ஒரு பிரச்சனையாயிருந்ததில்லை. தாவீது விக்கிரகாராதனையைச் சகிப்பவராய் இருந்ததில்லை (1 இரா. 9:6-9ஐக் கவனிக்கவும், இது 1 இரா. 9:4, 5ல் தாவீதைப் பற்றிய தேவனுடைய கூற்றைத் தொடர்ந்து வருவதாக உள்ளது). தாவீதின் ஆளுகைக் காலமானது இஸ்ரவேலுக்கு ஆவிக்குரிய வகையில் உயர்நிலையாக இருந்தது.*

*எனவே, தாவீதைக்குறித்த தேவனுடைய கடைசி வார்த்தை என்ன? அப். 13:22ன் வார்த்தைகளை மீண்டும் கவனியுங்கள். தாவீதின் மரணத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு, தேவன் இன்னமும் "தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்" என்று கூறினார். நாம் உண்மை களைப் பரிசோதித்து, ஆதாரத்தை சலித்து, எடை பார்த்து, நமது தவறக் கூடிய முடிவுகளை அடைந்தோம், தேவனோ "தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன் - அதுவே பொருட்படுத்தக் கூடியதாகும்!" என்று கூறுகையில் அவர் [தேவன்] தம்மை நமது இடத்தில் வைத்தார்.*

*நான் பரிபூரணப்பட்டவன் அல்ல, நீங்களும் அப்படியே. நான் என் சொந்த எதிர்பார்ப்பின்படி வாழ முடிவதில்லை, தேவனால் விதிக்கப்பட்ட கட்டளைகளில் குறைவுபடுகின்றவனாகக் காணப்படுகின்றேன். ஆயினும், என்னால் ஒரு விஷயத்தைச் செய்ய முடியும்: நான் தேவனை என் இருதயத்தில் முதலிடத்தில் வைப்பதினால், தாவீதைப் போலிருக்க என்னால் முயற்சி செய்ய முடியும். நான் எனது இருதயத்தைத் தேவனு டைய இருதயத்துடன் இசைவிக்கச் செய்வதில் எனது வாழ்வைச் செலவிட முடியும். எனது வாழ்வைப்பற்றி மனிதர்களின் கடைசி மதிப்பீடு இரக்க முள்ளதாக இருக்கலாம் அல்லது இராமல் போகலாம்; அவைகள் மிகச் சரியானவைகளாக இருக்கலாம் அல்லது இல்லாமல் போகலாம். ஆயினும் முடிவில், ஒரே ஒரு மதிப்பீடு மட்டுமே எண்ணக் கூடியதாக உள்ளது. தேவன், "தாவீது - தாவீது (டேவிட்) ரோப்பர் - என் இருதயத்திற்கு ஏற்ற மனுஷன்" என்று கூறக்கூடுமென்றால், அதுவே பொருட்படுத்தக் கூடியதாகும்.*

---

## பிரசங்கக் குறிப்புகள்

*இந்தப் பாடத்தில், தாவீதின் வாழ்வின் கடைசி நாட்கள், தொலைக் காட்சி நிகழ்ச்சியின கட்டமைவில் வைக்கப்பட்டுள்ளன. ஒருவேளை இது உங்களுக்கு பயனுள்ளதாகவோ அல்லது நீங்கள் வாழும் இடத்திற்கு*

ஏற்புடையதாகவோ இராதிருந்தால், நீங்கள் இந்தக் கட்டமைவை ஒரு மேடை நாடகமாகவோ - அல்லது நினைவுநாள் ஆராதனையில் இருக்கையில் அமர்ந்துகொண்டு முணுமுணுத்துக் கொண்டிருக்கும் விமர்சகர்களுடன் செயல்படும் நிகழ்ச்சியாகவோ கூட - முயற்சி செய்ய விரும்பலாம்.

பல சபைகளில் வயது முதிர்ந்தவர்கள் அதிகமாகிக் கொண்டுள்ளார்கள், ஆனால் அவர்களுடைய விசேஷத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் ஒரு சில பாடங்களே எடுத்துரைக்கப்படுகின்றன. நம்மில் வயது முதிர்ந்தவர்களாகிக் கொண்டிருப்பவர்கள் [ஒன்றுக்கொன்று] தொடர்புடைய இரண்டு பிரச்சனைகளைச் சந்திக்கின்றோம்: (1) வர்த்தக உலகிலோ அல்லது சபையிலோ, ஒரு காலத்தில் நாம் செய்தவற்றை இப்போது செய்ய முடியாமல் போகின்ற வேளையில், நமது அடையாளத்தை இழந்து போகுதல் மற்றும், (2) நம்மால் இயன்ற எல்லாவற்றையும் நாம் சாதித்திருந்தும், நமது எல்லாக் கனவுகளும் உண்மையாக மாட்டாது என்பதை உணர்ந்தறிதல், தாவீது தமது கடைசி நாட்களில் இவ்விரு பிரச்சனைகளையும் எதிர்கொள்ள நேரிட்டது: (1) அவர் ஒரு காலத்தில் செய்திருந்தது போல் யுத்தம் செய்ய பெலனும் திறமையும் இனியும் கொண்டவராய் இராது போனார். (2) தேவாலயம் கட்ட வேண்டும் என்ற [அவரது] கனவிற்குத் தேவன் “இல்லை” என்று கூறிவிட்டார். தேவாலயம் கட்டுவதற்கான தயாரிப்புப் பணிகளை மேற்கொள்ளுகையில் தாவீது தமது வாழ்வின் வலியுறுத்தங்களை மாற்றுவதன் மூலம் இவ்விரு அறைகூவல்களையும் சந்தித்தார். ஞானமுள்ள மனிதர் தாம் முதிர்வயதை அடைகையில் தமது இயக்கங்களை மாற்றக் கூடியவராகவும் அதே வேளையில் கிறிஸ்துவினிமித்தமாக ஒரு பொக்கிஷமாக அப்போதும் நிலைத்து நிற்கவும் செய்கின்றார். பின்வரும் கூற்றை நான் மிகவும் விரும்புகின்றேன்: “தாவீது [டேவிட்] பின்னோக்கிய வராக அல்ல ஆனால் முன்னோக்கியவராகவே மரித்தார்.”

தாவீதின் வாழ்வு பற்றிய பாடங்களை முடிப்பதற்கு, “அவர் பாடிக் கொண்டு சென்றார்” என்ற தலைப்பில் கடைசிப் பாடத்தைப் போதித்து, தாவீதை “இஸ்ரவேலில் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடினவர்” (2 சாமு. 23:1) என்று வலியுறுத்துதல் என்பது இன்னொரு வழியாக உள்ளது. இந்த சங்கீதங்கள் இன்னமும் நமது வாழ்வில் எவ்வாறு செயல்தாக்கம் தருகின்றன என்பதை வலியுறுத்துதல் என்பது இந்த எடுத்துரைப்பின் ஒரு பகுதியாக இருக்கக் கூடும்: (1) அவற்றைப் பற்றிய புதிய ஏற்பாட்டு மேற்கோள் காட்டுதல்களில் (சங்கீதங்களைப் பற்றி பழைய ஏற்பாட்டின் எந்தப் புத்தகத்தைக் காட்டிலும் புதிய ஏற்பாட்டில் அதிகமான மேற்கோள்கள் உள்ளன), (2) நாம் பாடும் பாடல்களில், மற்றும் (3) தாவீதின் சங்கீதங்கள் இன்றும் நமது இருதயங்களில் பேசுகின்ற வழிமுறையில் உள்ளன.

---

குறிப்புகள்

[1]W. Phillip Keller, *David, the Shepherd King* (Waco, Tex.: Word Publishers, 1986), 182. [2]*2 சாமுவேல் 21:1, “தாவீது கர்த்தருடைய சமூகத்தில் விசாரித்தான்” என்று*

*கூறுகிறது. [3]பழங்காலத்தவர்கள், நடந்த யாவற்றிலும் தேவனுடைய கரத்தைக் கண்டார்கள். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டுமே, தேவன் நமது கவனத்தைக் கவருவதற்காக இயற்கைச் சக்திகளை அடிக்கடி பயன்படுத்துவதாகப் போதிக்கின்றன. சமீபத்தில் நடந்துள்ள இயற்கைப் பேரழிவுகளைன்முக்கியமாக தமிழ்நாட்டில் 2004 கடைசியில் வீசிய சுனாமியைதிக் கண்ணோக்குகையில், "தேவன் நம்மிடத்தில் ஏதோ சிலவற்றைக் கூறுவதற்கு முயற்சி செய்கின்றாரா?" என்று கேட்பது தகுதியுள்ளதாக இருக்கும். [4]இந்த நிகழ்ச்சிக்கான பதிவேடு எதுவும் நமக்கு 1 சாமுவேல் புத்தகத்தில் இல்லை, நாம் இது எப்போது, ஏன் நடைபெற்றது என்பது பற்றி யூகம் மாத்திரமே செய்ய முடியும். 2 சாமுவேல் 21:2, "சவுல் இஸ்ரவேல் புத்திரருக்காகவும் யூதா புத்திரருக்காகவும் காண்பித்த வைராக்கியத்தினிமித்தம் அவர்களை வெட்ட வகை தேடினான்" என்று கூறுகிறது. சவுலை அறிந்துள்ள வகையில், அவரது நோக்கங்கள் அரசியல் ரீதியானதாக மட்டுமே இருந்திருக்கலாம். இதை நாம், "சவுல் இஸ்ரவேல் புத்திரருக்காகவும் யூதா புத்திரருக்காவும் காண்பித்த ன்அங்கீகரிக்கப்பட்டதி வைராக்கியத்தினிமித்தம்" என்று விரித்துரைக்கலாம். [5]இந்த தேர்ந்து கொள்ளுதலில் பிரதான ஆசாரியர்கள் உதவினார்கள் என்று ஒருவர் யூகம் செய்யலாம். [6]இந்த நிகழ்ச்சியானது அநேகமாக, தாவீது யோனத்தானிடத்தில் தாம் செய்த வாக்குறுதியை நிறைவேற்றிய பின்பு நடைபெற்றிருக்கும் (2 சாமு. 9). [7]இந்த ஏழு பேரைக் கொலை செய்த நிகழ்ச்சியானது யோனத்தானின் வம்சவழியைத் தவிர சவுலின் ஆண் வாரிசுகள் அத்தனை பேரையும் துடைத்து ஒழித்துப் போட்டிருக்கலாம் (யோனத்தானின் வம்சவழி மாத்திரமே நாளாகமத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது). [8]அப்னேர், ரிஸ்பாளுடன் பாலுறவு கொண்டிருந்ததாக இஸ்போசேத் குற்றம் சாட்டியிருந்தார் (2 சாமு. 3). [9]மேராப் என்பவள் தாவீதுக்குக் கொடுக்கப்படுவதாக முதலில் வாக்களிக்கப் பட்டு, பின்பு ஆதரியேலுக்குக் கொடுக்கப்பட்டாள். சில கைப்பிரதிகளில் மீகாள் என்றுள்ளது (KJV யில் காணவும்), ஆனால் மீகாளுக்குக் குழந்தைகள் இல்லை என்பதால் (2 சாமு. 6:23), அவர்கள் அவளது சகோதரியான மேராப் என்பவளின் பிள்ளைகளாயிருந்தார்கள் என்ற கருத்துத் தெரிவிக்கின்றார்கள். [10]அறுப்பு நாளின் துவக்க முதற்கொண்டு (மார்ச்சு முதல் மே மாதம் வரையிலும்) வானத்திலிருந்து அவர்கள்மேல் மழை பெய்யுமட்டும் (நவம்பர் டிசம்பர் மாதங்கள் வரை), ரிஸ்பாள் அங்கு தங்கியிருந்தாள் என்றால், அவள் அங்கு ஆறு அல்லது எட்டு மாதங்கள் தங்கியிருந்தாள் என்றாகின்றது!*

*[11]இந்த காலகட்டம் வரையிலும், சவுல் மற்றும் யோனத்தான் ஆகியோரின் எலும்புகள் கீலேயாத் யாபேசின் குடிகள் அவற்றைப் புதைத்திருந்த இடமான "யாபேசிலிருக்கிற தோப்பில்" இருந்தன (1 சாமு. 31:13). [12]தொடக்க காலப் பழமைவாத விளக்கவுரையாளர்களில் பலர், தாவீது தமது முடிவில் நியாயமானவராய் இருந்தார் என்று நினைக்கின்றார்கள். அவர்கள் "தேசத்தின் மீதிருந்த சாபம்" பற்றியும் "இரத்தத்திற்கு இரத்தம்" என்பது பற்றியும் பேசுகின்றார்கள். பிற்காலத்திய விளக்கவுரையாளர்கள் அவ்வளவு தைரியமானவர்களாக இருப்பதில்லை. [13]இந்த வசனப்பகுதியானது, "தேவனே, எங்களுக்கு நடத்துனர்களைத் தாரும்" என்ற பாடத்தில் சுருக்கமாய் விளக்கப்பட்டு உள்ளது. [14]இந்த கால கட்டத்தில்தான் தாவீதின் மனிதர்கள் அவரை இனிமேல் யுத்தத்திற்குச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். [15]2 சாமுவேல் 22ம் அத்தியாயம், அடிப்படையில் சங்கீதம் 18ஐப் போலவே உள்ளது. இவ்விரு பகுதிகளைப் பற்றிய ஒரு ஒப்பீட்டிற்கும் விளக்கவுரைக்கும், பின்வரப் போகும் "இன்றைக்கான சத்தியம்" புத்தகங்கள் ஒன்றில் காணவும். [16]இந்த வசனப்பகுதியில் உள்ள பாடக்கருத்து, இந்தப் பாடத் தொடரில் இதற்கு முன்பு ஏற்கனவே பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது, விசேஷமாக "தேவனே, எங்களுக்கு நடத்துனர்களைத்*

*தாரும்'' என்ற பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. [17]இந்தப் பட்டியலானது, 1 நாளாகமம் 11ம் அத்தியாயத்தில் காணப்படுகிறது. உரியாவுக்குப் பின்பு மற்ற பலர் பட்டியலிடப் படுகின்றார்கள். "முப்பது பேர்கள்" என்னப்பட்டவர்கள் இறந்து போகையில், அவர்களுக்குப் பதிலாக, தங்களைச் சிறப்பாக தனிப்படுத்திக் காண்பித்த மற்ற யுத்த வீரர்கள் அவ்விடத்திற்கு மாற்றப் பட்டார்கள் என்பது உறுதி. இவ்விதமாக, "தாவீதின் புகழ்பெற்ற இராணுவக் குழுவானது" பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வளர்ந்தது. [18]கூடுதல் விவரங்களுக்கு, ''வளர்ந்தவர்களுக்கான ஒரு வரலாறு'' என்ற பாடத்தில் இவ்வசனப்பகுதியை பிரசங்கரீதியில் விளக்கியிருப்பதைக் காணவும். [19]1 நாளாகமம் 21:5ல் மாறுபட்ட எண்ணிக்கைகள் தரப்படுகின்றன. இருப் பினும், 1 நாளாகமம் 21:6ம், 27:23, 24ம், இந்த ஜனத்தொகை கணக்கெடுப்பு முடிவடையாததாக ஆயிற்று என்று குறிப்பிடுகின்றன. ஒருவேளை உண்மையான கணக்கு என்ன என்பது ஒருபோதும் தெளிவற்றதாக இருந்தது (எனலாம்). [20]தாவீது தாம் பாவம் செய்ததாக முடிவுக்கு வந்தது ஏன் என்று நமக்குக் கூறப்படுவதில்லை. ஒருவேளை யோவாபின் வார்த்தைகளில் இருந்து உண்மையை அவர் [தாவீது] மறுதலிக்க இயலாமல் போனபோது, அவை அவரைக் குத்தி உணர்த்தி இருக்கலாம். ஏதோ ஒரு இயற்கைச் சீரழிவு, தேவன் தாவீதின்மீது பிரிய மற்றவராக இருந்தார் என்று நம்பச் செய்தது என்று 1 நாளாகமம் 21:7 சுட்டிக் காண்பிக்கலாம்.*

*[21]2 சாமுவேல் 24:13ல் "ஏழு வருஷம் பஞ்சம்" என்றுள்ளது. செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பிலும் 1 நாளாகமம் புத்தகத்திலும் "மூன்று வருஷம்" என்றுள்ளன, இது தர்க்கரீதியாக அதிகப் பொருத்தமுடையதாகக் காணப்படுகிறது: மூன்று வருஷம், மூன்று மாதம் அல்லது மூன்று நாள் (2 சாமு. 24:13ஐ யூபீ, ஹிணூா மற்றும் பிற மொழிபெயர்ப்புகளில் காணவும்). [22]அர்வானா, 1 நாளாகமம் 21:18ல் ஓர்னான் என்று அழைக்கப்படுகின்றார். வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் இருந்த பல மக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களைக் கொண்டிருந்தார்கள். [23]1 நாளாகமம் 21:30, நகருக்கு அருகில் இருந்த ஒரு இடம் தேவனால் குறிக்கப் பட்டது என்பதற்கு ஒரு காரணத்தை மறைமுகமாக உணர்த்துகிறது: காலம் மிகவும் முக்கியமானதாயிருந்தது, தாவீது தகனபலி செலுத்தும் பீடம் இருந்த கிபியோனுக் குச் செல்ல நேரம் இருக்கவில்லை (ஸிய யின் பொழிப்புரையில் காணவும்), ஆயினு ம், தாவீது இதில் ஆழமான தனிச்சிறப்பைக் கண்டு, அந்த இடத்தைத் தேவாலயத் திற்கான இடம் என்று குறிப்பிட்டார் (1 நாளா. 22:1; 2 நாளா. 3:1). [24]2 சாமுவேல் 24:24, ''தாவீது அந்தக்களத்தையும், மாடுகளையும் ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்குக் கொண்டான்" என்று கூறுகிறது. 1 நாளாகமம் 21:25, "தாவீது அந்த நிலத்திற்கு அறுநூறு சேக்கல் நிறை பொன்னை ஓர்னானுக்குக் கொடுத்து" என்று கூறுகிறது. இது தனித்தனியான இரு பரிவர்த்தனைகளாயிருந் திருக்கலாம், முதலாவது அந்தத் தூற்று களத்திற்கு மாத்திரமும், இரண்டாவது தேவாலயம் கட்ட வேண்டிய முழு இடத்திற்கும் நடைபெற்றதாயிருக்கலாம். [25]1 நாளாகமம் 21:26, "அவர் ன்கர்த்தர்தி வானத்திலிருந்து சர்வாங்க தகன பலி பீடத்தின்மேல் இறங்கின அக்கினியினால் அவனுக்கு மறுஉத்தரவு கொடுத்ன்தார்தி" என்று கூறுகிறது. இது கர்மேல் மலையின்மேல் வானத்திலிருந்து வந்த அக்கினிக்கு இணையானதென்று யூகிக்கப்படுகிறது (1 இரா. 18:38). [26]இங்கு பின்வரும் இரு சாத்தியக்கூறுகள் உள்ளன: ஒருவேளை, தாவீது சுற்றிலும் உள்ள நாடுகளை அச்சுறுத்த இந்த ஜனத்தொகைக் கணக்கைப் பயன்படுத்த விரும்பியிருக்கலாம், அல்லது அவர் யூதேயாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையில் கலகம் ஏற்பட்டால் யூதேயாவில் யுத்தம் செய்யப் போதுமான அளவு மக்கள் இருக்கின்றார்களா என்று அறிய விரும்பி இருக்கலாம். [27]தேவாலயத்திற்கான தாவீதின் தயாரிப்புப் பணிகள் பற்றி ''பரிசுத்த பூமியில்*

*நிற்குதல்'' என்ற முந்திய பாடம் ஒன்றில் கலந்துரையாடப்பட்டது. தாவீது இராஜ்யத்தை ஒருங்கமைத்தல் பற்றி "தேவனே, எங்களுக்கு நடத்துனர்களைத் தாரும்" என்ற பாடத்தில் கலந்துரையாடப்பட்டது. [28]1 நாளாகமம் 23:1. நாம், 1 இராஜாக்கள் 1; 2; 1 நாளாகமம் 23-29 ஆகியவற்றின் நிகழ்ச்சிகள் யாவற்றின் உண்மையான நாள் வரிசை அமைப்பையும் தனிச்சிறப்பையும் அறிவதில்லை. இந்தப் பாடத்தில் உள்ள மறுகட்டுமானமானது ஒரு சாத்தியக்கூறாக இருக்கலாம். [29]கர்த்தருக்குச் சித்தமானால், இந்த வசனப்பகுதிகள், எதிர்காலத்தில் சாலொமோன் மற்றும் 1, 2 நாளாகமம் பற்றிய இதழ்களில் இன்னும் ஆழமாய் விவரிக்கப்படும். [30]சூனேம் என்ற ஊரானது இசக்கார் கோத்திரத்தில் மலையோரப் பகுதியில் யெஸ்ரயேலின் சமவெளிக்கு அருகில் அமைந்திருந்தது.*

*[31]ன்உடலுக்குச்தி சூடு உண்டாக்குதல் என்பதே இந்த ஏற்பாட்டின் முக்கிய நோக்கமாயிருந்தது என்று யோசிப்பாஸ் கூறுகின்றார் (பிர. 4:11ஐக் காணவும்). ஆயினும் தாவீது ஏற்கனவே பல மனைவிகளையும் மறுமனையாட்டிகளையும் கொண்டிருந்தார், அவர்கள் அவருக்குப் படுக்கையைச் சூடுபடுத்தப் பயன் பட்டிருக்கக் கூடும். இராஜ்யமெங்கும் தேடி மிகுந்த அழகுள்ள பெண்ணைக் கண்டறிதலின் வலியுறுத்தமானது, ஒருவர் அரசராகப் பணியாற்ற தகுதிச் சோதனையாகப் பழங்காலத்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயலாக இது இருக்கலாம் என்று சிலரை நம்பச் செய்துள்ளது: ஒரு மனிதரின் வீரியமே அவரது பலத்தின் அளவாகக் கருதப்பட்டது. ஆயினும் தாவீது தம்மால் முடியாதிருந்ததால் அல்லது தாம் அதைச் செய்யத் தேர்ந்து கொள்ளாததால், அபிஷாகுடன் உறவுகொள்ளாதிருந்தாரா என்பது வெறும் யூகத்திற்கு உரிய விஷயமாகவே உள்ளது. [32]அபிஷாக் தாவீதின் மனைவி என்று ஒருக்காலும் குறிப்பிடப்படாததால், அவர் அவளைத் திருமணம் செய்து கொண்டார் என்ற கருத்தைச் சிலர் மறுக்கின்றார்கள். அவள் குறைந்தபட்சம் அவரது மறுமனையாட்டிகளில் ஒருத்தியாக இருந்தாள் என்று நான் நம்புகின்றேன். ஒழுக்க ரீதியாகக் காணுகையில், வேறு எவ்வகையிலும் தாவீது இந்த ஏற்பாட்டிற்கு சம்மதித்திருப்பதற்குச் சாத்தியக் கூறு இல்லை (தொடர்ந்து வந்த நிகழ்ச்சிகள் காண்பித்தபடி, அவரது மனம் இன்னு ம் தெளிவாகவே இருந்தது). அபிஷாக் தாவீதின் அந்தப்புறத்தில் இல்லாதிருந்ததால், அபிஷாகை அதோனியா ன்பெறவிரும்பிக்தி கேட்டு கொண்டது பற்றி சாலொமோன் அவ்வளவு அதிர்ச்சி அடைந்திருக்க மாட்டார் என்பது வசன ரீதியாகத் தெளிவாகின்றது (1 இரா. 2:22 முதல்). [33]அதோனியா, சாலொமோனைத் தவிர தமது சகோதரர்கள் யாவரையும் ன்விருந்திற்குதிஅழைத்திருந்தார் என்று உண்மையானது (1 இரா. 1:9, 10, 19), அவர், சாலொமோன் அடுத்த ராஜாவாக அபிஷேகம் பெற்றிருந்தார் என்பதை அறிந்திருந்தார் என்று சுட்டிக்காண்பிக்கிறது. [34]அதோனியா நான்காவதாய்ப் பிறந்தவராயிருந்தார் (2 சாமு. 3:4). மூத்த மற்றும் மூன்றாவது மகன்களான அம்னோன் மற்றும் அப்சலோம் ஆகியோரின் மரணத்தைப் பற்றி நாம் கண்டோம். இரண்டாவது மகனான கிலேயாப்/தானியேல் இளைஞராயிருந்தபோதே மரித்துப் போனார், என்று பொதுவாக யூகிக்கப்படுகிறது. [35]அதோனியா, தாமே உயிருடன் இருந்த மகன்களில் அடுத்த மூத்தவராயிருந்த படியால், தாம் ராஜாவாக வேண்டும் என்று நினைத்தார் என்று, 1 இராஜாக்கள் 1:6 வசனம் நம்மை அறியச் செய்கிறது. அவர் தாம் ஒரு அரசனைப்போன்ற தோற்றம் கொண்டிருந்ததால் (அவர் வனப்பு மிக்கவராயிருந்தார்) தாம் ராஜாவாக முடியும் என்று நினைத்தார், மற்றும் அவர், தாம் விரும்பிய எதுவும் தமக்கு எப்போதும் கிடைத்த காரணத்தால் தாம் ராஜாவாவோம் என்று நினைத்திருந்தார் ("அவரது தந்தை எந்த வேளையிலும் அவரது விருப்பத்திற்குத் தடையாக இருந்ததில்லை"). [36]இவர்கள் அதோனியாவுடன் ஏன் சூழ்ச்சியில் ஈடுபட்டார்கள் என்பதை நாம்*

*யூகிக்க மட்டுமே முடியும். இவர்கள் அதோனியா வெற்றி வாய்ப்பைக் கொண்டிருந் ததாகவும் அவருக்கு ஆதரவளித்தால் அது தங்களுக்கு அநுகூலமாயிருக்கும் என்றும் நினைத்திருப்பார்கள் என்பது உறுதி. பெனாயாவைத் தமது பணியைச் செய்ய வைப்பதில், யோவாப் ஒருவேளை பயந்திருக்கலாம் (1 இரா. 2:3). அபியத்தார் ஒருவேளை சாதோக்கைக் குறித்துப் பொறாமைப்பட்டிருக்கலாம். [37]அதோனியா அப்சலோமின் செயலைப் பின்பற்றினார். ன்இந்த விருந்திற்குதி அழைக்கப்படாதவர்களின் பட்டியல் 1 இரா. 1:8, 10ல் பட்டியலிடப்பட்டுள்ளது. "சீமேயி"யும் "ரேயி"யும் யார் என்று நமக்குத் தெரியவில்லை (இவர் தாவீதை சபித்த சீமேயி அல்ல). [38]தாவீது இது பற்றி ஆணையிட்டார் என்று ன்இதற்கு முன்தி குறிப்பிடப்பட வில்லை என்றாலும், தாவீது ஆணையிட்டதாக பத்சேபாளும் நாத்தானும் கதை கட்டினார்கள் என்று நாம் நம்புவதற்குக் காரணம் எதுவும் இல்லை (1 இரா. 1:13, 17). சாலொமோன் அடுத்த ராஜாவாவார் என்பதைத் தாவீது அடிக்கடி சுட்டிக் காண்பித்தார், மற்றும் தாவீதின் உடல்நிலை சரியில்லாதிருந்த போதிலும், தாம் அந்த ஆணையை ஏற்படுத்தியதை ஒப்புக் கொள்ளும் அளவுக்கு அவர் தம் மனநிலை சரியானதாகவே இருந்தது (1 இரா. 1:30). [39]தாவீதின் கடைசி நாட்களில் சாலொமோன் ஒரு உடன் ராஜாவாகப் பணியாற்றினார் (1 இரா. 1:46, 48ஐக் காணவும்). [40]இந்தக் கடைசி வெளிப்படையான தோற்றத்தின் விவரங்களுக்கு, 1 நாளாகமம் 28; 29ஐக் காணவும்.*

*[41]நமது கண்ணோக்கிலிருந்து காண்கையில், பழிவாங்குதலுக்கான அவர் தம் உறுதியான விருப்பமானது தாவீது சாலொமோனுக்குக் கூறிய கடைசி வார்த்தை களை, அழித்துப் போட்டதாகக் காணப்படுகிறது. இருப்பினும், அவைகள் கடுமையான கொடூரமான நாட்களாயிருந்தன என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும். நான் என்னைத் தாவீதின் இடத்தில் வைக்க முயற்சி செய்தேன். என் வார்த்தைகள் தாவீதின் வார்த்தைகளைப் போல் கூர்மையாக இராது போகலாம், ஆனால் நான் எனது மகனை, சாத்தியக் கூறுள்ள கலகக்காரர்கள் குறித்து எச்சரிக்கை செய்திருப்பேன். [42]தாவீது தமது வேறு எந்த மகன்களிடத்திலும் (பதிவேட்டில் உள்ளபடி) ஒருக்காலும் செய்திராத ஒரு செயலான, கர்த்தருக்கு உண்மையோடு நடந்து கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்ளுதலைத் தமது மகன் சாலொமோனிடத்தில் பலமுறை விசேஷ கட்டளைகளாகவே கொடுத்தார். தாவீது ஒரு முன்னுதாரணமான தந்தையாக இருந்ததில்லை, ஆனால் அவர் குறைந்தபட்சம் தமது மகன்களில் ஒருவரை நன்முறையில் வளர்க்க முயற்சி செய்திருந்தார். மிகச் சிறந்த தந்தையாக இருக்க முயற்சியை இப்பொழுதே தொடங்குவது கூடத் தாமதமானது அல்ல. [43]2 சாமுவேல் 23:1-7ன் வார்த்தைகள் "தாவீதின் கடைசி வார்த்தைகள்" என்று அழைக்கப்படுகின்றன. [44]சீமேயி உயிரோடு விட்டு வைக்கப்படுவார் என்று தாவீது ஆணையிட்டிருந்த படியால் (2 சாமு. 19:23), சீமேயியைப் பற்றிய தாவீதின் கட்டளையானது இவ்வசனப்பகுதியில் புரிந்துகொள்ள மிகவும் கடினமானதாக உள்ளது. தொடக்க காலப் பழமைவாத விளக்கவுரையாளர்கள், கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்ட வரைத் தூஷித்துப் பேசுதலின் விளைவுகளைக் குறிப்பிட்டு, தாவீதைத் தற்காத்தார்கள். சமீப கால கல்வியாளர்கள், தாவீது தமது மகன் சாலொமோனிடம் கேட்டுக் கொண்டதில் நியாயப்படுத்தப்பட்டாரா அல்லவா என்பது பற்றி பிரிந்து கிடக்கின்றார்கள். சிலர், சீமேயி மிகவும் செல்வாக்குடைய மனிதராயிருந்தார் (இது, தாவீது திரும்பி வருகையில் சீமேயி ஆயிரம் பென்யமீனியரைத் தம்முடன் அழைத்து வந்ததினால் மெய்ப்பிக்கப்பட்டது) என்றும் அவர் தொடர்ந்து சாலொமோனை அச்சுறுத்தத் தொடங்கினார் என்றும் குறிப்பிடுகின்றார்கள். மற்றவர்கள் இதை தாவீதின் மனிதத் தன்மைக்கு இன்னொரு உதாரணமாக - அவரது மரணத்திற்கு முன்பு அவரது*

*கடைசிச் சரிவாக எடுத்துக் கொள்கின்றார்கள். மன்னித்தலின் மீதான கடைசி வார்த்தை தாவீதினுடையதாயிருப்பதில்லை, ஆனால் அது இயேசுவினுடையதாகவே உள்ளது. [45]எரேமியர் 31:34; எபிரெயர் 8:12. நாம் பாவத்தை விட்டு மனந்திரும்பும்போது என்ற கருத்தமைவில்தான் கர்த்தர் நமது பாவங்களை "மறந்து" விடுகின்றார், அவற்றை அவர் ஒருக்காலும் மீண்டும் நமக்கு எதிராக மேலே கொண்டு வருவ தில்லை. அது ஒருக்காலும் நடந்ததில்லை என்பது போல் உள்ளது. ஆயினும் எல்லாம் அறிந்த தேவன் என்ற வகையில் கர்த்தர் ஒவ்வொன்றையும் நினைவில் வைத்திருக்கின்றார்.*